# நேசக்கரங்கள்

NESAKKARANGAL | නෙසක්කරංගල

நேசக்கரங்கள் இதழ் 18 ஜனவரி- பெப்ரவரி 2022 (ஹிஜ்ரி 1443 ரஜப்)




## உள்ளடக்கம்:-

| | |
|---|---|
| உண்மையான சுதந்திரம் எது? | - பக்கம் 01. |
| நம்மை வீழ்த்தியது நாமேதான் | - பக்கம் 02. |
| உங்களிடம் இருக்கிறதா தாழ்வு மனப்பான்மை? | - பக்கம் 03. |
| இல்லறமா? துறவறமா? | - பக்கம் 03. |
| பிற மதங்கள் மீதான வெறுப்பை நீக்குவதே மத நல்லிணக்கத்துக்கான முதல்படி | - பக்கம் 04. |
| குழப்பங்களும் பயங்கரவாதமும் | - பக்கம் 05. |
| இஸ்லாம் ஒரு பார்வை | - பக்கம் 06. |
| 2 ஆம் குடியரசு அரசியலமைப்பு - (1978) வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் | - பக்கம் 08. |
| மனங்களைப் பாருங்கள் மதங்களைப் பாராதீர்கள் | - பக்கம் 09. |
| சமாதானத்திநற்கு மதங்கள் எதிரானதா? | - பக்கம் 10. |
| கொவிட் 19, டெல்ரா, ஒம்ரிகோன் போன்ற தொற்று நிலையைவெற்றிகொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்? | - பக்கம் 11. |
| யாழப்பாணம்: 30.10.1995 | - பக்கம் 12. |

# நேசக்கரங்கள்

NESAKKARANGAL நெஸக்கரங்கல

நேசக்கரங்கள் இதழ் 18 ஜனவரி- பெப்ரவரி 2022 (ஹிஜ்ரி 1443 ரஜப்)



நேசக்கரங்கள்

NESAKKARANGAL

நெஸக்கரங்கல

“அகதி” இதழின் தொடர்ச்சி
“நேசக்கரங்கள்”
இதழ் 18 ஜனவரி - பெப்ரவரி 2022
(ஹிஜ்ரி 1443 ரஜப்)



**PEOPLE’S SECRETARIAT**
No.83, Navalar Road,
Jaffna, Sri lanka.

0212226349
0777381033
Sultansufyan@gmail.com
Peoplessecretariat.wordpress.com

**மக்கள் பணிமனை**
இல-83, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

0212226349
0777381033
Sultansufyan@gmail.com
Peoplessecretariat.wordpress.com



இச்சஞ்சிகையில் வெளியாகும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவரே பொறுப்புடையவர்கள்


ஆசிரியர் பக்கம்

# உண்மையான சுதந்திரம் எது?

இன்றைய மனிதன் போதைவஸ்துகளுக்கு அடிமையாகியிருக்கிறான்; உலகின் சுக போகங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறான். அவற்றுக்காக பெறுமதியான மனித உயிர்களைக் கொலை செய்கிறான். அதிகாரப் போதைக்கு அடிமைப்பட்டுள்ள இன்றைய மனிதன் அதிலிருந்துவிடுபட முடியாது, அந்த போதையின் சுகத்தில் மிதந்து கொண்டிருப்பதற்காக தனக்கு சரி என்று தோன்றியதையெல்லாம் செய்கிறான். இன, மத, குல, மொழி வெறிகளுக்கு அடிமையாகிப்போயுள்ள இன்றைய மனிதன், இரத்த ஆறுகளை ஓடச் செய்து இன்பம டைகிறான். அதிகாரத் துஷ்பிரயோகம், காட்டுச் சட்டம், இலஞ்சம், ஊழல், மோசடி, சூது என மேற்கூறப்பட்ட அடிமைத்தளைகளின் விளைவுகள் எண்ணற்றவை.

அதிகார போதையில் உழலும் வல்லரசுகள் நலிவடைந்த நாடுகளை தமது ஆதிக வெறிக்கு அடிமைப்படுத்தும் நோக்கில் கட்டவிழ்த்து விட்டுள்ள அட்டகாசங்கள் கொஞ்சமல்ல. அவற்றால் இன்றைய உலகம் அமைதியிழந்து யுத்தம், வறுமை, அகதி வாழ்க்கை, சுகாதார சீர்கேடு போன்ற கொடிய அவலங்களால் பரிதவித்துக் கொண்டிருக்கிறது.

ஆட்சி மாற்றம் நிகழ்ந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள பின்னரும் இனங்களுக்கிடையில் அச்சமற்ற, அமைதியான, நல்லிணக்க சூழல் உருவாகும் நிலை பின்தள்ளப்பட்டுக் கொண்டே செல்கிறது. இனவாத சக்திகளுக்கு இந்த அரசாங்கமும் பக்கபலமாக இருக்கிறதா என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படும் அளவுக்கு இனவாத சக்திகளின் குரல் கூர்மையடைந்து வருகிறது. சிறுபான்மையினர்களுக்கு எதிரான வெறுப்புப் பிரசாரம் தொடர்கிறது; இலஞ்சம், ஊழல் குறைவடைநீததாகத் தெரியவில்லை. இத்தகையதொரு சூழலில் மீண்டும் ஒரு சுதந்திர தினத்தை நாடு கொண்டாடியுள்ளது

'சுந்திர இனம்” என்பது எமது நாட்டை ஆக்கிரமித்த சக் திகள் இந்த நாட்டிலிருந்து வெளியேறிய தினமாகும். அந்தத் தினம் மீண்டும் மீண்டும் வந்து கொண்டே இருக்கும். நாடும் நாமும் சம்பிரதாயமாக அதனைக் கொண்டாடிக் கொண்டே இருப்போம்.

இந்த சந்தர்ப்பத்தில் சுதந்திர சிந்தனை குறித்து சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். 'சுதந்திர சிந்தனை' என்பது தனிமனிதர்களையும் இனங்களையும் சமூகங்களையும் தேசத்தையும் ஆட்டிப் படைக்கும் அனைத்து அடிமைத்தளைகளிலிருந்தும் விடுதலை பெறும் கனவாகும். இந்தக் கனவுக்கு செயலுருவம் கொடுக்கும் நாளும் எம்மை நோக்கிவர வேண்டும். அன்றுதான் சுதந்திரத்தின் அர்த்தம் முழுமை பெறும். அந்த நாளை இந்த நாட்டுக்கு கொண்டு வருபவர்கள் நிச்சயம் இந்த நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் அடையாளப்படுத்தப்படுவார்கள்.

# நம்மை வீழ்த்தியது நாமேதான்

இன்று நாம் சந்தித்துக்கொண்டிருக்கும் சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை நாம் எங்கோ தேடுகிறோம். மற்ற நாடுகள் நமக்கு வழிகாட்டாதா, உதவி செய்ய முன்வராதா என, பிறநாட்டு அனுபவங்களை ஆய்வு செய்கின்றோம் மற்றும் உதவிகளை நாடுகின்றோம்.
ஒட்டுமொத்தத்தில் பிரச்சினைகளானாலும் சரி, தீர்வுகளானாலும் சரி அதை நாம் வெளியிலிருந்து பெற்றால்தான் அது சரியானதாக இருக்கும் என்ற கருதுகின்றோம். பிரச்சினைகளும் தீர்வுகளும் நம்மிடம்தான் இருக்கின்றன என்பதை நாம் உணர்வதில்லை. இப்படிப்பட்ட மனோபாவம்தான் நம் ஆற்றலை, சக்தியை மற்றும் தனித்தன்மையை இழக்கச் செய்கின்றது.
வெள்ளைக்காரன்
நம்மையாண்டாலும் சரி, பொருளாதாரம் உலகமயமானாலும் சரி, இவற்றால் பாதிக்கப்படும் போது நாம் யாரையாவது குறைகூறுகின்றோம், கூச்சலிடுகின்றோம். வெள்ளைக்காரர்கள் வந்தார்கள்
நம்மையாண்டார்கள் என்றால் அதற்கு வெள்ளைக்காரர்கள் காரணம் அல்ல. நாம் வெள்ளையர்களைச் சம்பாதிக்கவும் ஆளவும் அனுமதித்தோம். அவர்கள் நம்மை சுரண்டினார்கள், அதையும் நாம் அனுமதித்தோம். அதற்குத் தீர்வு என்ன, நாம் நம்மை தயார்செய்து கொண்டோம் நல்ல தலைமையின் கீழ். அதனால் வெள்ளையர்களை விரட்ட முடிந்தது. அதேபோல் உலகமயமாதலால் நம் பொருளுக்கு மரியாதை இல்லை, நம் தொழில் நசியும் என்றால், வெளிநாட்டுப் பொருள்களை நம் மக்கள் நிராகரித்தால் உலகமயமான பொருளாதாரம் நம்மை என்ன செய்யும்? அல்லது நம் பொருளை வெளிநாட்டுப் பொருளைவிடத் தரமாக்கிவிட்டால் என்ன செய்யமுடியும்? உலகத்தில் நடைபெறும் எல்லா மாற்றங்கள் அதுவாக வந்து சமுதாயத்தில் இறங்குவது கிடையாது. அரசாங்கத்தின் மூலம், அரசாங்க கொள்கைகளின் மூலம்தான் வந்து இறங்குகின்றன. அதை நிராகரிக்க அரசை மக்கள் நிர்ப்பந்தித்தால் அரசால் என்ன செய்யமுடியும்? அரசு தன்னுடைய முடிவை மாற்றத்தானே வேண்டும். இதேபோல் இன்று அரசியல் கொன்றுவிட்டது ஒழுக்க நியதிகள் கொஞ்சம் கொஞ்சமாக சமுதாயத்தை விட்டுன
அகன்றுவிட்டன் சுரண்டி வாழும் நிலை அனைத்து மட்டத்திலும் ஊடுருவிவிட்டது என நாம் அங்கலாய்த்துக்கொள்கிறோம். இவற்றிற்கான மூலாகரணங்கள் எவை? நவீனமயமான வாழ்க்கையும் மேற்கத்திய வாழ்க்கை முறையும் நுகர்வுக் கலாசாரமும் எப்படியும் முன்னேறவேண்டும் என்ற தீரா ஆசையும்தான் நம் மக்களை இவ்வளவு பிரச்சினைகளுக்கும் ஆளாக்கி இருக்கின்றன இவையெல்லாம் நமக்கு மேற்கத்திய நாடுகளிலிருந்து வந்தவை எனவும் கூறுகின்றோம். ஆனால் இதே அணுகுமுறைகளைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் நாடுகள் சுபிட்சமாக இருக்கின்றனவே.

ஒழுக்க நியதிகளை தங்களுக்குள் பின்பற்றிக்கொள்கின்றார்களே. ஏன் நம்மால் மட்டும் முடியவில்லை? நம் வாழ்க்கைமுறை நாம் வாழும் சூழலுக்கு உகந்ததாக அமையாமல் இறக்குமதி
செய்யப்பட்டக் கருத்துக்கலும் வாழ்க்கை முறையிலும் அணுகுமுறைகளிலும் தோய்ந்துபோன
காரணத்தால் நாம் பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டோம், மீள வழி தெரியாமல் தவிக்கின்றோம்.

மேற்கத்திய நாடுகளில் மக்கள்தொகை பிரச்சினையே கிடையாது. அவர்கள் நவநாகரிகமாக வாழலாம்: எல்லா வசதிகளுடனும் வாழலாம்: நுகர்வுக் கலாசாரத்தில் தோயலாம்: கிடைக்கும் வசதிகள் அனைவருக்கும் கிடைக்கும் ஆகையால் போட்டியும் பொறாமையும் பொய்யும் சூதும் செய்யவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. அனைவருக்கும் தேவையான அத்தியாவசிய வசதிகள் கிடைக்கும் என்ற உத்தரவாதம் இருக்கின்றது. எனவே, அவர்கள் யாவருக்கும் கையூட்டுக் கொடுக்கவேண்டியது கிடையாது. யாரையும் சென்று யாசிக்க வேண்டியது கிடையாது, யார் தயவையும் நாடவேண்டியது கிடையாது, பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் நமக்கு இங்கு ரேஷன் கடையில் கிடைக்கும் அரசி தகுதியிலிருந்து கிடைக்குமா? என்ற உத்தரவாதம் கிடையாது. நம் ஊரில் வழங்கப்படும் குடிதண்ணீர் நமக்குத் தேவையான அளவுக்குக் கிடைக்கும் என்ற உத்தரவாதம் கிடையாது. இந்தச் சூழலில் சாதாரண மனிதனின் மனோபாவம் எப்படி இருக்கும். எல்லாவற்றிலும் பற்றாக்குறை உள்ள நாட்டில். மக்கள் எப்படியாவது தங்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகளைப் பெற்றுவிட வேண்டும் என்று எண்ணுவார்களே தவிர ஒழுக்க நியதிகளைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். இந்த மோசமான சூழலுக்கு அனைவருமே காரணம். இதற்கான காரணங்கள் என்ன என்பது பற்றி மக்களிடம் விவாதித்தோமா, அவற்றை எப்படித் தீர்ப்பது என்று மக்களிடம் கருத்துக் கேட்டோமா? அதற்கு மாறாகப் பிரச்சினைகளை வைத்து அரசியல் நடத்தினோம். ஆதாயம் தேடினோம்.

பழையன பேசி மக்கள் அறிவுக்கத் தீனி போடாமல் உணர்வுகளுக்குத் தீனிபோட்டு அரசியல் நடத்தி
நம்மையே நாம் ஏமாற்றிக்கொண்டு வருகின்றோம். எத்தனை நீதி இலக்கியங்கள் இருந்தாலும், அவையெல்லாம் ரசிப்பதற்கும் பிரசங்கத்திற்கும் தானேயொழிய வாழ்க்கைக்கு அல்ல. ஏனென்றால் ஒழுக்க நியதிகளும் நெறிமுறைகளும் வாழ்க்கையில் பின்பற்றினால், தன்னால் வெற்றிபெற இயலாது என்ற அளவுக்கு நம் சமுதாயச் செயல்பாடுகள் உருவாகிவிட்டன. இந்தச் சூழலுக்கு யார் காரணம்? நாம்தானே.

நம் கிராமங்களின் தண்ணீர் தேவையை நிறைவேற்ற நாம் உலக வங்கியை உதவிக்கு அழைக்கின்றோம். உலக வங்கி நிதியை மட்டும் தரவில்லை. எப்படி நாம் தண்ணீர் மேலாண்மை செய்வது என்ற அணுகுமுறையையும் தந்து. தண்ணீர் இனி விலை நிர்ணிக்கப்பட்ட பொருளாக மாற்றப்படவேண்டும் எனவும் வலியுறுத்திவிட்டது. நாம் இதற்கு உலக வங்கியைக் குறை சொல்லக் கூடாது. உலக வங்கி, பணம் என்னிடம் இருக்கிறது, நான் தருகின்றேன் பிரச்சியையைத் தீர்க்க, என்று சொல்லவில்லை. நாம் தான் பிரச்சினைகளைத் தீர்க்கப் பணம் கேட்கின்றோம். இந்தப் பிரச்சினைகள் எங்கே இருந்து வந்தன? ஊரில் உள்ள குளங்களை தூர்த்துக் கட்டிடம் கட்டச் சொன்னது உலக வங்கியா? தண்ணரை வீணடிக்கச் சொன்னது உலக வங்கியா? குளங்களையும், ஏரிகளையும் தூர்த்து வீட்டுமனை போட்டு விங்கச் சொன்னது உலகவங்கியா? இவங்ஙையெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும். பிரச்சினைகளை உற்பத்தி செய்வது நாம்தான், மற்றவர்கள் அல்ல, நம் பிரச்சினைகளுக்குக் காரணங்கள் என்ன? என்பதை நாம் சிந்தித்தோமா? இப்படிக் காரணங்களைக் கண்டுபிடித்துச் சொன்னல், அவற்றை மாற்றியமைக்க முனைந்தோமா? யோசிக்கவேண்டும். பிரச்சினைகளை நாம் உருவாக்குகின்றோம், பிரச்சினைகளுக்குத் தீர்வை மற்றவர்களிடம் எதிர்பார்க்கின்றோம். மக்கள் அரசாங்கத்திடம் எதிர்பார்க்கிறார்கள். அரசாங்கம் உலக வங்கியிடம் எதிர்பார்க்கிறது. அரசாங்கம் பொதுவாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு
நிதிதான் மூல ஆதாரம் என எண்ணுகிறது.

நம் நாட்டில் பொதுச்சுகாதாரம் சீர்கெட்ட நிலையில் இருக்கிறது. அது சரி செய்யப்பட வேண்டும்.
மக்கள் அந்தப் பிரச்சினையைப் பற்றி ஏன் சிந்திக்கவில்லை? மக்கள் இந்த பிரச்சினையின் முக்கியத்துவத்தை தெரிந்துகொள்ளாதது ஏன்? மக்களுக்கு அது பிரச்சினையாகத் தெரியவில்லை. ஏனென்றால் அரசாங்கம், உலகவங்கி, அதிகாரிகள் அனைவரும் மக்களுக்காகச் சிந்திக்கிறார்கள். ஆனால் அவர்கள் மக்களைச் சிந்திக்க வைக்கவில்லை. ஏனென்றால் மக்களிடம் சிந்தனை இல்லை. மக்களால் சிந்திக்க இயலாது, அல்லது மக்கள் சிந்திப்பது நல்லதல்ல என அனைவரும் நினைக்கின்றார்கள். இந்தச் சூழலில் நாம் ஒன்றை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நாம் பார்க்கும் ஆயிரக்கணக்கான கோவில்கள் மக்களால் கட்டப்பட்டவைகள்தான். அவை காலத்தைக் கடந்து இன்று வரலாற்றுச் சின்னங்களான உள்ளன. இன்றைக்கு நாம் பார்க்கும் குளங்கள், ஏரிகள், ஆயிரக்கணக்கில் மக்களால் உருவாக்கப்பட்டவைகள்தான். மக்கள் தங்களிடம் உள்ள அறிவியல் தொழில்நுட்பம், ஆற்றல் இவைகளை வைத்தே இந்த வரலாற்றுச் சாதனைகளை உருவாக்கினார்கள். உலக வங்கியில் கடன் வாங்கி நம் கோயில்கள் கட்டப்படவில்லை. உலக வங்கியில் கடன் வாங்கி நாம் ஏரிகளையும், குளங்களையும் வெட்வில்லை. மக்களின் உழைப்பின் மூலம் உருவாக்கப்பட்டவைகள் தான் இவை.

ஆகையால்தான் கோவில்களையும் குளங்களையும் ஏரிகளையும் தங்களின் சொத்தாக, உரிமையாக மக்கள் வைத்துக்கொள்ள வேண்டும் என எண்ணுகின்றனர். ஆனால் இன்று மக்கள் வெட்டிய ஏரிகளை, குளங்களை தூர்வார உலகவங்கியிடம் நிதி கோரப்படுகிறது. மக்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்க உலகவங்கி நிதி கோரப்படுகிறது. சாக்கடையைப் போக்கவும், விதி அமைக்கவும் வங்கிகளில் நிதி கோரப்படுகிறது. இது எதனால்? மக்களின் ஆற்றல் மேல் நம்பிக்கை வைப்பதில்லை. நம் மக்களுக்கு ஆற்றல் இருப்பதாகவும் நாம் நினைப்பதில்லை.

தண்ணிரின் முக்கியத்துவம் அறிந்து தண்ணீர் சேமிப்பு. தண்ணீர் மேலாண்மை போன்றவைகளில் நம் முன்னோர் சிறப்புப் பெற்றவர்களாக விளங்கியுள்ளனர். நம் மக்களிடம் தண்ணீரப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பது இல்லை. ஏனென்றால் பொதுமக்கள் பிரச்சினைகளைக்குத் தீர்வுகாணும் சக்தி அற்றவர்கள் என்றே நாம் அனைவரும் நினைக்கின்றோம். இந்த மனோபாவத்திற்கு என்ன காரணம்? என்று யோசிக்க வேண்டும்.

இன்று மக்கள் அனாதைகளாக, வறியவர்களாக, பயனாளியாக, மனுதாரராக, வாக்காளராக பார்க்கப்படுகிறார்களேயன்றி, சமுதாயத்தை முன்னேற்றக்கூடியவர்களாக பார்க்கப்படுவதில்லை. நாம் அப்படி மக்களிடம் செல்வதில்லை. நம்நாடும் நமது சமுதாயமும் மாற முதலில் நம்மேல் நமக்கு நம்பிக்கை வரவேண்டும். மக்களை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்ல மக்களை நன்கு தயார்ப்படுத்த வேண்டும். வளமான வாழ்விற்கு, வறுமையற்ற வாழ்விற்கு, அமைதியான வாழ்விற்கு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நாம் யாராக இருந்தாலும் முதலில் நம் மக்களை நாம் நேசிக்க வேண்டும். நம் மக்களின் மேல் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

நாம் நம்முடைய எஜமானர்களாக தலைவர்களையும் அதிகாரிகளையும் அலுவலர்களையும் நினைக்கின்றோம். ஆனால் நம் அரசாங்கத்தை உருவாக்குகின்ற, அரசுக்குத் தேவையான நிதி தருகின்ற மக்களை நாம் மதிப்பதில்லை. நாம் அவர்களை ஏளனமாகத்தான் பார்க்கின்றோம். மக்களை மதிக்கத் தேவையில்லை என்றும், மக்களை உதாசீனப்படுத்துங்கள் என்றும் உலகவங்கி சொல்லவில்லை. வெள்ளைக்காரர்கள் சொல்லவில்லை. நாம்தான் அப்படி நடந்துகொள்கிறோம். நாம் முன்னேறவில்லை என்றால் அதற்கு நாம்தான் காரணம். நம்மை வீழ்த்துவது நம்மைப்பற்றி, நம் மக்களைப் பற்றி நாம் வைத்திருக்கும் தாழ்ந்த மதிப்பீடே ஆகும். இத்தகைய போக்கு முதலில் நம்மைவிட்டு அகலவேண்டும்.

-பேராசிரியர். க. பழனித்துரை

ஒன்றினைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

# உங்களிடம் இருக்கிறதா தாழ்வு மனப்பான்மை?

தாழ்வு மனப்பான்மை தேவையற்றது. இது மனிதர்களை சோர்வடையச் செய்துவிடும். மேலும் அவர்களுக்குள் இருக்கும் திறமையை வெளிவராமல் தடுத்துவிடும். இதனால் அவர்களுடைய எதிர்காலம்பாதிக்கும்.
தாழ்வு மனப்பான்மைக்கு, தனிப்பட்ட காரணம் என்று எதுவும் சொல்ல முடியாது. ஒரு சிலருக்கு குடும்ப் பின்னணி காரணமாக இருக்கலாம். ஏழ்மை நிலையில் உள்ள குடும்ப்த்திலிருந்து வந்த தன்னை யாரும் மதிக்கமாட்டார்கள் என்ற எண்ணம்தலை தூக்கிவிட்டால் தாழ்வு மனப்பான்மை வந்துவிடும். தன் செயல்களைக் கண்டு மற்றவர்கள் தன்னை குறைத்து மதிப்பிடுவார்களோ என்ற சிந்தனை எப்போதும் அவர்கள் மனதில் ஓடிக்கொண்டிருக்கும்.
ஒருவர் தாழ்வு மனப்பாண்மையில் இருக்கிறார் என்பது தெரிந்தால் அதுவே சுற்றி இருப்பவர்களுக்கு பொழுது போக்காக மாறுவது உண்டு. அவரை சீண்டிப் பார்த்து குஷி அடைவது சிலருக்கு பிடிக்கும். சீண்டல் அதிகமாகும்போது. தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள். தாங்கள் எதற்கும் லாயக்கு இல்லாதவர்கள் போல கருதிக் கொள்வார்கள். அதையே உண்மையாகவும் மாற்றிவிடுராகள். அவர்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ள ஆர்வம் காட்ட மாட்டார்கள்.

**மனநல நிபுணர் டாக்டர் நிஷா செனாய்- இது பற்றி கூறுகிறார்.**

இந்த மனநிலைக்கு சோஷியல் போபியா என்று பெயர். சமூகத்தைப் பற்றிய பயம் இவர்களுக்கு எப்போதும் இருக்கும். தன்னை யாரும் எதுவும்தவறாக சொல்லி விடுவார்களோ என்ற அச்சம் மனதில் குடிகொண்டிருக்கும். இதன் காரணமாக யாரிடமும் அதிகம் பேசமாட்டார்கள். மற்றவர்களிடமிருந்து ஒதுங்கியே வாழ்வார்கள்.
சமூகத்தில்தோ ஒரு விஷயம் அவர்களுக்கு பொருந்தாமல் போகலாம். எங்கோ ஒரு பலவீனம் இருக்கலாம். அதையெல்லாம் பெரிய சமூக குற்றமாக கருதக்கூடாது. நம்மை நாமே சரிபடுத்திக் கொள்ளவும் மேம்படுதத்திக் கொள்ளவும் எத்தனையோ வழிகள் உள்ளன. அதில் கவனம் செலுத்துவதை விடட்டு மற்றவர்கள் பேசும் பேச்சுகளுக்கு தங்கள் திறமைகளை பலி கொடுக்கக்கூடாது. இதனால் உங்களின் எதிர்காலம்தான் கேள்விக்குறியாகும். இதனால் இது கவனிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு மனநல ஆலோசனை அவசியம்.

### தாழவுமனப்பான்மை கொண்டவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது?

மற்றவர்களைவிட தாங்கள் ஏதோ குறையுள்ளவர்கள் போல கருதி பெரும்பாலும் தனித்திருப்பார்கள். யாரையும் நேக்கு நேர் கணக்ளைப் பார்தது்ப் பேசமாட்டார்கள்.
ஏதோ ஒன்றை நினைத்து பயந்து போயிருப்பார்கள் அதே சூழ்நிலை வந்தால்நடுங்கிப் போய்விடுவார்கள். பலர் முன்பு தொடர்ச்சியாகப் பேச தடுமாறுவார்கள். அவர்கள் பேச வந்த விஷயத்தை பயம் தடுத்துவிடும்.
சின்ன சின்ன விஷயங்களைக் கூட பெரிதுபடுத்தி பேசுவார்கள். உடல்நடுங்கும், ஏதோ ஒரு சஞ்ஜலம் வழிகளில் தென்படும். அமைதியற்ற நிலையில் இருப்பார்கள்.
ரத்த அழுத்தம் அதிகமாகும் அல்லது குறைந்து போகும். நாலு பேர் சுற்றி நின்று கேள்வி கேடட்டால், இதயம் வேகமாக படபடத்து மயங்கியும் விடுவார்கள். ஏதாவது தவறு நடந்துவிட்டால் பயந்து நடுங்குவார்கள். தன்மதீ ஏதாவது பழி வந்துவிடுமோ என்று எப்போதும் அஞ்சுவார்கள். முக்கிய பொறுப்புகளை ஏற்கத் தயஙக்வார்கள். அலுவலக விவாதங்களில் பேசும் போது சுற்றி இருப்பவர்களை பார்தது ஒருவித தடுமாற்றத்துடன் பேசுவார்கள்.
எந்த ஒரு விஷயத்தையும் கோர்வையாக பேசத் தெரியாது. மூளை தெளிவற்ற நிலையில் எப்போதும் குழப்பத்திலேயே இருக்கும்.
இவர்கள் எப்போதும் வேண்டாத சிந்தனைகளில் மூழ்கிக் தங்களைத் தாங்களே வருத்திக் கொள்வார்கள்.

### இதற்கான காரணங்கள் என்ன?

உடல் பலவீனம், ரத்த ஓட்டம் குறைவு, அனிமியா என்று சொலல்க்கூடிய ரத்தசோகை போன்றவை முக்கிய காரணம்.
குடும்ப சூழ்நிலை, குடும்ப உறுப்பினர்களின் நிந்தனை, பாதுகாப்பின்மை. சிறுவயதில் ஏற்பட்ட ஏதோ ஒரு விபத்து அல்லது அதிர்ச்சியான சம்பவம் அதனால் ஏற்டபட்ட பாதிப்பு, வீட்டிலேயே பொத்திப் பொத்தி வளர்க்கப்படுதல், சிறுவயதிலேயே தன்னம்பிக்கையை இழக்கச் செய்தல் சுற்றி இருப்பவர்களின் தவறான கணிப்பு, கருத்து, சிரிப்பு, கேலி, இவர்களின் செயல்களைப் பற்றிய விமர்சனம் இதெல்லாம் இவர்களை கீழே தள்ளிவிடுகிறது.
சிலருக்கு பரம்பரை ரீதியாகவும் வருகிறது. தன்னம்பிக்கை குறையும்போது மனம் பலவீனமடைகிறது. அப்போது தாழ்வு மனப்பான்மை உருவாகிறது. இந்த தாழ்வு மனப்பான்மை கல்வியையும், உத்தியோகத்தையும், உடல் நலனையும் பாதிக்கும்.

### சிகிச்சை

கணடிப்பாக இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். உளவியல் நிபுணர்கள் இவர்கள் நிலையை ஆராய்ந்து தக்க சிகிச்சையளிப்பார்கள்.
உடலில் போதுமான அளவு ரத்தம் அதிகரிக்கவும், மனம் அமைதி பெறவும், பதற்றமின்றி உடலை சிறப்பாக இயக்கவைக்கவும் மருந்துகள் உள்ளன. மனம் அமைதியானால், நல்ல சிந்தனைகள் தோன்றும். தன்னம்பிக்கை உருவாகும். மனம் பலம் பெறும். பயிற்சிகள் நல்ல பலன்தரும். மொத்தத்தில் நம்மைப் பற்றிய விமர்சனம் ஒரு அனுபவம். நம் தவறுகளிலிருந்து திருத்திக்கொள்ள சமூகம் கொடுக்கும் ஒரு சந்தரப்பம். அதைப் புரிந்து கொண்டு நம்மை நாமே மேம்படுத்திக் கொள்ள வேண்டும். அதைவிடட சமூக்தை விட்டு ஒதுங்கிப் போகக் கூடாது.

## இல்லறமா? துறவறமா?

அரசன் ஒருவனுக்கு "இல்லறம் சிறந்ததா துறவறம் சிறந்ததா" என்ற ஐயம் ஏற்பட்டது. அதற்கு யாராலுமே விளக்கம் தர இயலவில்லை. துறவி ஒருவர் அரண்மனைக்கு வந்தார். அவரை வரவேற்ற அரசன் தன் ஐயத்தை அவரிடம் கேடட்டான்.
"என்னுடன் சில நாட்கள் இருங்கள். உங்கள் ஐயத்தைப் போக்குகிறேன்" என்றார் துறவி.
தன் அரசாட்சியை அமைச்சரிடம் ஒப்படைத்த அரசன் துறவியுடன் புறப்பட்டான்.
இருவரும் இன்னொரு நாட்டை அடைந்தனர்.அந்நாட்டு இளவரசிக்குச் சுயம்வரம் நடந்நது. பலநாட்டு இளவரசர்களும் அங்கே வந்திருந்தனர். அவர்களில் யாரையும் அவ்வரசிக்குப் பிடிக்கவில்லை.
தன் கணவரைத் தேர்ந்து எடுப்பதங்காகச் சுயம்வர மண்டபத்தை விடடு வீதி வழியாக வந்தாள் அவள்.
"தன்னை மணக்க மாட்டாளா? அந்த நல்வாய்ப்பு தனக்குக் கிட்டாதா? என்ற எண்ணத்தில் மக்களில் பலரும் வீதியின் இரு மருஙக்ும் குழுமி நின்றனர்.
அங்கே ஒரு துறவியும இருந்தார். அவரைக் கணட்ாள் இளவரசி. துறவுக் கோலத்திலும் அவர் பேரழகு அவளை கவர்ந்தது. தன் கணவராக அவரை ஏற்றாள். தன் கையிலிருந்த மாலையை அவரின் கழுத்தில் போட முயன்றாள்.
"நானோ துயவி! எனக்குத் திருமணம் எதற்கு? நான் உன்னை ஏற்க மாட்டேன்" என்று கூறி அந்த மாலையைத் மறுத்தார் துறவி.
அருகிலிருந்த அரசன் "என் மகளோடு நாட்டில் பாதியையும் தநது் உங்களை அரசன் ஆக்குகின்றேன். என் மகள் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினான்.
"எனக்குத் திருமணமே வேண்டாம்" என்ற அவர் அவ்விடத்தை விடடு வேகமாக நடக்கத் தொடங்கினார்.
"மணந்தால் அவரையே மணப்பேன். இல்லையேல் இறப்பேன்" என்று சொன்ன இளவரசி அவரைப் பின் தொடர்ந்தாள்.
இதைப் பார்தத் துறவியும் அரசனும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்.
வேகமாகச் சென்ற அந்தத் துறவி காட்டிற்குள் நுழைந்து எங்யோ மறைந்து விட்டார். அவரைப் பின்தொடர்ந்த இளவரசி அவரையும் காணாமல் வழியும் தெரியாமல் திகைத்து நின்றாள். அழுது புலம்பினாள். பின்தொடர்ந்து வந்த அரசனும் துறவியும் அவளைக் கண்டனர்.
"கவலைப் படாதே! இப்பொழுது இருட்டி விடட்து. அருகிலுள்ள மரத்தின் அருகில் நாம் இரவைக் கழிப்போம். காலையில் உன்னை அரண்மனையில் விடடுவிட்டுச் செல்கிறோம்" என்றார் துறவி.
மூவரும் அம்மரத்தின் அடியில் அமரந்தனர். அமம்ரத்தில் ஒரு பறவை தன் மனைவியுடன் வாழ்ந்து வந்தது.
மரத்தடியிலிருந்த அவர்களைக் கண்ட ஆண் பறவை, " அன்பே ! நம் இல்லம் நாடி வந்துள்ள இவர்களுக்கு விருந்து அளிப்பது நம் கடமை அல்லவா" என்று மனைவி இடம் சொன்னது.
இரு பறவைகளும் சேர்ந்து சுள்ளிகளைப் பொறுக்கி வந்து மரத்தினடியில் தீமூட்டின.
அவர்களைப் பார்தது, "வெளியே குளிர் வாடடுகிறது. இந்தத தீயின் அருகிலிருந்து குளிரைப் போக்கிக் கொள்ளுங்கள்" என்றது ஆண் பறவை.
மூவரும் தீயின் அருகில் சென்று அமர்ந்தனர். சிறிது நேரம் கழிந்தது. "விருந்தினர்களின் பசியை நாம் போக்கியாக வேண்டும். நம்மிடம் உணவு இல்லை என்ன செய்வது" என்றது ஆண் பறவை.
"நானே தீயில் விழுந்து அவர்களுக்கு உணவாகிறேன்" சொல்லிக் கொண்டே தீயில் பாய்ந்தது.
பறவை தீயில் விழாமல் தடுக்க முயன்று மூவரும் தோற்றனர். பறவை தீயில் வெந்து கொண்டிருந்தது.
"என் கணவரின் உடல் மட்டும இவர்கள் உண்பதற்குப் போதாதே. கணவருக்குத் துணையாக நிற்பது மனைவியின் கடமை அல்லவா" என்று நினைத்து பெண் பறவை அதுவும் தீயில் விழுந்து மாண்டது.
தங்களுக்கு விருந்து அளிக்கவே பறவைக் குடும்ப இறந்தது என்பதை அறிந்த மூவரும் திகைத்தனர். அவற்றின் இறைச்சியை உண்ணாமல் அன்றிரவைக் கழித்தனர்.
பொழுது புலர்ந்தது. இளவரசியை அரண்மனையில் விடடுவிட்டுத் துறவியும் அரசனும் வெளியே வந்தனர்.
அரசனைப பார்தது்த் துறவி, "நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் பார்த்தீர் அல்லவா? இல்லறத்தில் வாழ்வதானால் அந்தப் பறவைகளைப் போலப் பிறருக்காக உயிரை இழக்கத் திடமாக இருக்க வேண்டும். துறவு நிலையில் இருப்பதனால் அழகான இளவசியோடு நாடே கிடைத்தாலும் அவற்றைத் துறக்கும் பற்றற்ற மனநிலை இருக்க வேண்டும். உன் ஐயத்திற்கு இப்பொழுது விடை கிடைத்து விட்டது அல்லவா?" என்று கேடட்ார்.
"**அவரவர் நிலையில் அவரவரே பெரியவர். ஒருவரோடு இன்னொருவரை ஒப்பிடுவது தவறு** என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன்" என்று பதில் சொல்லிவிட்டுத் தன் நாடு சேர்ந்தான் அரசன்.

-பேராசிரியர் எ. சோதி

ஒன்றினைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

# பிற மதங்கள் மீதான வெறுப்பை நீக்குவதே மத நல்லிணக்கத்துக்கான முதல்படி

குகைகளிலும் காடுகளிலும் வாழ்ந்த மனிதர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். நாளடைவில் மனிதன் நாகரீகமடைய ஆரமபித்தான். தனக்கென மொழிகளை உருவாக்கிய மனிதன் அதிகாரத்துக்காகப் போட்டியிட்டான். ஆசையெனும் மோகத்தால் தான் எண்ணியதை அடைய சக மனிதர்களை கொல்லவும் மனிதநேயத்தை மறந்து மிருகமாக மாறவும் ஆரம்பித்தான்.

மனிதனை மனிதனாக்கி நல்வழிப்படுத்துதல் எனும் உயர்ந்த நோக்குடன் உருவானவையே மதங்கள். பிரிவினையை ஏற்படுதத்துவதறக்காக மதங்கள் உருவாக்கப்படவில்லை.
உலகத்தில் பலகோடி மக்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு மனிதர்களும் விருப்பு வெறுப்புகளை உடையவர்கள் இங்கு மனிதர்களே மனிதர்களை மதித்து நடவாது போன பிறழ்வு நிலையில்தான், இறைவனை பிரித்து மதமாக மாற்றிக் கொண்டு மனிதர்கள் வழிபட தொடங்கினர்.
மதங்கள் பல தோன்றி மனிதர்களை வேறுபடுத்துவதற்கல்ல. ஒவ்வொரு மனிதர்களும் வெவ்வேறான மதங்களை பின்பறறுகின்றனர். வேறுபட்ட கலாசாரங்களையும் பழக்கவழக்கங்களையும் கொண்டு காணப்படுகின்றனர். இருப்பினும் எல்லோரும் சக மனிதர்களே என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.
இதனையே **கணியன் பூங்குன்றனார்** "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று பாடுகின்றனர். இங்கே மனிதர்களிடையே இனம் மதம், மொழி, சாதி என பல வேறுபாடுகளை நாம ஒழித்துவிட வேண்டும். மனிதநேயம் என்ற ஒன்றினால் பிறமனிதர்களோடு அன்பு பாராட்டுதல் தான் சிறப்பானது.

## மனிதநேயம் என்றால் என்ன?

சக மனிதர்களிடம் அன்பு காட்டுவதை மனிதநேயம் எனக் கூறலாம். இதில் உயரிய பண்பு மனித நேயத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. பிறருக்கு துன்பமளிக்காமல் இருத்தல் இயலாதவர்களின் துன்பத்தைப் போக்குதல், இளகிய இதயமும், இரக்க சுபாவமும் உறுதியான செயற்பாடுகளையும் கொண்டிருத்தல் என்றும் கூறலாம்.
1983 இல் அமெரிக்கா சிகாக்கோ நகரில் நடைபெற்ற உலக மதங்களின் பாராளுமன்றத்தில் அனைவரையும் சகோதர.... சகோதரிகளே... என்று விவேகானந்தர் விளித்து உலக மக்களிடையே மனித நேயத்தை எடுத்துரைத்தார். தொடர்ந்தும் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்" என்று பாடுகிறார் வள்ளுவர். அதாவது மனிதர்கள் எனபப்டுபவர்கள் பிறப்பினால் சமனானவர்கள் என்பதாகும். உயர்வு தாழ்வு இல்லாமல் பிற மனிதர்கள் மீது அன்பு பாராட்டுதல் அந்த உயரிய பண்புடையவனே உண்மையான மனிதனாவான். அத்தகைய பண்பிலாதவனை மனிதனாக கருத முடியாது என வள்ளுவரும் தெளிவுபடுத்தியுளள்ார்.
மதசுதநதிரம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் என்பது தனிநபர்கள் அல்லது சமூகங்கள் எந்தவொரு சமயம் தொடர்பாக பொதுவிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ நம்பிக்கைகளை வைத்திருப்பதற்கும் வழிபடுவதறகும் சடங்குகளை நடத்துவதற்குமான சுதநதிரமாகும். இது தொடர்பான நம்பிக்கையை வைத்திருக்காமல் இருப்பதற்குமான சுதந்திரமாகும். பல நாடுகளும் மக்களும்சமயச் சுதந்திரம் என்பது அடிப்படை மனித உரிமை என்று கருதுகின்றனர். பிற சமயஙக்ளைக் கைக்கொள்வதற்காக அவர்கள் துன்புறுத்தப்பட மாட்டார்கள் என்றே பொருள்படும். எல்லா மதங்களும அன்பைத்தான் போதிக்கின்றன. மனிதகுலம உயர்ந்திட சமயம் பெரும் பங்காற்றுகிறது. மத நல்லிணக்கம் மனித குலத்தில் நட்பு, அன்பு, அமைதி போன்றவற்றை உருவாக்குகிறது. மத நல்லிணக்கம் மனிதனைக் காக்கும முக்கிய காரணிகளில் ஒன்று எனத் தெளியலாம்.
இன்றைய இருபத்தோறாம் நூறற்ாண்டில் எந்தவொரு நாடும் தனித்திறமையால் இயங்கிவிட முடியாது. இதற்கு காரணம் நாடுகளுக்கிடையே, பொருளாதார, சமூக, கலாசார இணைப்புகள் அதிகமாக உருவாகுவதேயாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், மதநல்லிணக்கம் மிக இன்றியமையாதது. வெவ்வேறு மதங்களில் உள்ள நல்ல கருத்துக்களை வெளிச்சம் போட்டுக்காட்டி அவற்றை அனைவரும் பின்பறற் ஊக்குவிப்பவன் உலகத்திற்குப் பெரும் நன்மை செய்துவிடுகிறான். எந்த மதத்தையும் வெறுக்காமல் எல்லா மதங்களையும் ஆக்கபூர்வமாகக் காணவேண்டும்.
அனைத்து மதங்களும் இங்கே அன்பை தான் போதிக்கின்றன. உதாரணமாக அன்பே சிவம் "என்கிறது இந்துசமயம். பிற மனிதர்கள் மீதும் உயிர்கள் மீதும் கருணைக்கொள்ள வேண்டும் என்கிறது. ஏழைகளுக்கும் இல்லாதவர்களுக்கும் உணவளித்தல் இறைவனுக்கு செய்யும தொண்டு என்று இந்துமதம் போதிக்கின்றது.
உன்னைப்போல் அடுத்தவனையும் நேசிக்க வேண்டும் என்கிறார் இயேசு கிறிஸது கிறிஸ்தவமதமும் பிறருக்கு செய்யும் சேவையே உயர்ந்த சேவையென போதிக்கின்றது. அன்பு, கருணை, சகிப்புதன்மை, ஒறறுமை போன்ற விடயங்களையும் கிறிஸ்தவ மதம் கற்பிக்கின்றது.
அது போல இஸ்லாமிய "புனிதநபி" மனிதம்காத்து வாழ்வதே இஸ்லாமியர்களின் உயர்ந்த அறம் என்கிறார். பௌத்த மதத்தின் "கௌதம புத்தர்" "அன்பையும் அமைதியையும் கொண்டு வாழ்பவனே பௌத்தன் என்கிறார்". பல சமயஙக்ள் வேறுபட்ட சாத்திரங்களையும் சடங்குகளையும் கொண்டிருந்தாலும அடிப்படையான கொள்கையில் ஒன்றுபடுகின்றன. பல்வேறு இடங்களில் தோன்றிப் பாய்ந்தோர்டும் ஆறுகள் முடிவில் கடலில்தான் கலக்கின்றன. அதேபோன்றுதான் சமயஙக்ள் வேறு வேறு காலக்கட்டத்தில் தோன்றியிருந்தாலும் அவற்றின் இலக்கு இறைவனை அடைவது தான்.
இவ்வாறு உலகின் அனைத்து மதங்களும் நல்வழியைத்தான் போதிக்கின்றன. ஆனால் அதனை புரிந்துக் கொள்ளாத சில மனித மிருகங்கள் மதங்களின் பெயரில் பிரிவினையை உண்டாக்கி மோதல்களையும் பிரச்சினைகளையும் உலகில் தோற்றுவிக்கின்றன. தன் மதத்தை மட்டுமே ஆதரிப்பவன் உலகில் மோதலை ஏற்படுத்தி வன்முறையைத் தூண்டுவதோடு தீவிரவாத அமைப்புக்களை உருவாக்கவும் முறப்டுகின்றான். மதவாதத்தை விதைத்து அரசியல் இலாபம தேடுவதோடு சில அரசியல்வாதிகள் தலைவர்கள் அவர்களை நம்பியுள்ள மக்களையும் நாட்டையும் பிளவுபடுத்தும் இழி செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனை தமது நாட்டுக்குள் மட்டுமன்றி உலகளவிலும் செயற்படுத்த முறப்டுகின்றனர். மத நல்லிணக்கத்தை கட்டாயப்படுததி உருவாக்க இயலாது. அன்பினால்தான் அதைச் சீராக வளர்க்க முடியும்.

## எவ்வாறு மத நல்லிணக்கத்தைப் பேணலாம்

முதலில் பிற மதங்களின் மீது ஒருவருக்குள்ள மன வெறுப்பை நீக்குவதே முதல்படி. பிற மதங்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தும் கருத்துக்களையோ அல்லது பகைமை உணர்வைத் தூண்டும் கருத்துக்களையோ பரப்பக்கூடாது. பிற மதத்தவரின் விழாக்களில் கலந்து கொள்வது நட்பை வளர்க்கும். பொதுவிழாக்களின் போது ஏனைய மத சடங்குகளை செய்யும் நேரத்தில் பொறுமையைக் கையாள்வதோடு மனப்பூர்வமாக மரியாதை செய்யவும் வேண்டும்.
"ஒன்று பட்டால் உண்டுவாழ்வு" என்பது நம் முன்னோர்களின் பொன்மொழி. நாம் மனிதர்கள் என்ற உயர்திணைக்குரியவர்கள். சாதாரண ஐந்தறிவு விலங்குகள் கூட ஒறறுமையாக தமது கூட்டங்களுடன் வாழ்வதை நாம் அவதானிக்கின்றோம். ஆனால் இந்த மனிதர்கள் மாத்திரம் ஏன் இவ்வாறு முட்டாள்கள் போல சகமனிதர்களையே கொன்றும் கொடுமைப்படுததியும் வாழ்கின்றார்கள். இது மாற வேண்டும். மதங்கள் வெவ்வேறாக இருந்தாலும அவை மனிதம் என்ற ஒன்றைதான் போதிக்கின்றன. ஆகவே மனிதம் பேணினால் இவ்வுலகம அன்பில் திழைக்கும் என்பது திண்ணம்.
மனிதன் என்பது இயற்கையின் உச்சக்கட்ட படைப்பு. பலகோடி ஆண்டுகால பரிணாம வளர்ச்சியின் விளைவால் இயற்கைக்கு கிடைத்த மாபெரும் பரிசு. வரம்பில்லா வலிமை பெற்ற மனிதன் மனிதநேயம் எனும மகுடத்தை சூடினால் மட்டுமே வைரமாய் மிளிர்வான் என்பதை நாம் அனைவரும் புரிந்தக் கொள்ள வேண்டும். மத இன மொழி வேறுபாடுகளை மறந்து தியாகத்துக்காகவும் நல்ல கொள்கைக்காவும் பிற மதத்தை மனப்பூர்வமாக மதிக்க

-யதுஷா ரவிதியாகராஜா

**வாக்கு உங்கள் உரிமை (Vote is your Right)**

**வாக்குரிமை குடியுரிமையொன்றாகும். அரசியல் அமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்களுக்குள்ள இறைமையை உண்மையாகவே பிரயோகிக்கமுடிவது வாக்குரிமையூடாகவேயாகும். இதற்காக வாக்காளர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்பட்டிருத்தல் இன்றியமையததாகும். வாக்காளர் இடாப்பில் பெயரை உட்சேர்த்தலும் வாக்களித்தலும் மக்களுக்குள்ள உரிமையொன்றாகும். உரிமையை பயன்படுத்தி கொள்வதற்கு கட்டாயம் தேர்தல் இடாப்பில் உங்கள் பெயரினை உரிதுப்படுத்திக் கொள்ளத் தவறாதீர்கள்**

ஒன்றினைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

# குழப்பங்களும் பயங்கரவாதமும்

சமாதானத்தை இலட்சியமாகக் கொண்ட மார்க்கம் இஸ்லாம். சாமாதான பூமியாக உலகம் திகழ்வதையே அது எதிர்பார்க்கிறது. சமாதானத்துக்கெதிரான செயலை அது நிராகரிக்கிறது. குழப்பங்கள் ஏற்படுதத்ப்பட்டு பூமி பிணக்காடாவதை அது கண்டிக்கிறது. அல்லாஹ் அல்குர்ஆனிலே கூறுகிறான்.

**பூமியில் குழப்பம் செய்து கொண்டு அலையாதீரக்ள்**

-(அல்குர்ஆன் 28:77)

**பூமியில் குழப்பம் செய்ய விரும்பாதே ! நிச்சயமாக அல்லாஹ் குழப்பம் செய்யும் விமிகளை விரும்புவதில்லை.**

-(அல்குர்ஆன் 28:77)

**அட்டூழியம் புரிவோருக்கு மிகக் கெட்ட தங்குமிடமான நரகம் காத்திருக்கிறது. அதில் அவர்கள் நுழைவார்கள்.**

-(அல்குர்ஆன் 38:55-56)

**நிச்சயமாக நகரம் அட்டூழியம், புரிவோரின் வரவை எதிர்பார்தத் வண்ணமாகவுள்ளது. (வரம்பு மீறுவோரின்) தங்குமிடம் அதுவே.**

-(அல்குர்ஆன் 78:21-22)

**பூமி சீராக அமைதியாக இருக்கும்போது அதிலே குழப்பத்தை ஏற்படுத்தாதீர்கள்.**

-(அல்குர்ஆன் 7:56)

**பூமியில் குழப்பம் விளைவிக்கவும், விவசாயத்தையும் சந்ததியையும் அழிக்கவும் அவன் முயற்சி செய்கின்றான். அல்லாஹ் குழப்பத்தை விரும்பவே மாட்டான்.**

-(அல்குர்ஆன் 2:205)

**வரம்பு மீறுவோரின் கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படியாதீர்கள். அவர்கள் பூமியிலே குழப்பத்தை ஏற்படுத்துவார்கள். சமாதானத்தை ஏற்படுத்தமாட்டார்கள்.**

-(அல்குர்ஆன் 26-151-152)

மேற்காணும் வசனங்கள் அனைத்தும் குழப்பங்களை இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் குழப்பம் விளைவிப்போர் அனைவரும் சென்றடையும் இடம் நரகம் என்பதைம் கோடிட்டுக் காட்டுகிறது. இஸ்லாததில் மிகக் கொடூரமான குற்றச் செயல்களுக்கே நரகம் என்ற தண்டனை என்று இஸ்லாம் கூறுவது கவனிக்கத்தக்கதாகும்.

பூமியிலே குழப்பத்தை ஏற்படுத்தி அதன் மூலம் உயிர்ப்பலி ஏற்படுதத்துவதையிட்டு அல்குர்ஆன் கூறுவதைக் கனிப்போம்.

**எவன் மற்றொரு ஆத்மாவின் கொலைக்குப் பிரதியாகவோ அல்லது பூமியில் குழப்பத்தைத் தடை செய்வதற்காகவோ அன்றி (அநியாயமாகக்) கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவன் போலாவான். எவன் ஓர்ஆத்மாவை வாழவைக்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையும் வாழ வைத்தவன் போலாவான்.**

-(அல்குர்ஆன் 5:32)

ஓர்உயிரை அநியாயமாகக் கொல்வது மனித இனத்தை முழுமையாகக் கொல்வதற்கு சமமானதென்றும் அதேபோல் ஓர் உயிரைக் காப்பாறறுவது மனித இனத்தையே காப்பாறறுவதறக் ஒப்பானதென்றும் எமக்கு அல்குர்ஆன் போதிக்கிறது. எனவே இவ்வாறு கூறும மாரக்கம், பூமியிலே குழப்பங்கள் ஏற்படுவதையும் உயிர்கள் பலியாவதையும் ஏற்குமா? என ஒவ்வொருவரும் சிந்திதது்ப் பார்க்க வேண்டும்.

## சமாதானத்தைக் குழப்பாதீர்கள்

சமாதானத்தை ஏற்படுத்திய பின்னர் அந்தச் சாமாதானத்துக்கு விரோதமாக நடந்து குழப்பம் செய்வோருடன் யுத்தம் செய்யுமாறு இஸ்லாம் பணிக்கிறது. அல்லாஹ் கூறுகிறான்.

**விசுவாசிகளில் இருசாரார் தங்களுக்குள் சண்டைபிடிததுக் கொண்டால் அவர்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுததிவிடுங்கள். சமாதானத்தை ஏற்படுத்திய பின் ஒரு சாரார் மற்றவர்கள் மீது வரம்பு மீறினால் அக்கிரமம் செய்தவர் அல்லாஹ்வின் கட்டளையின்பால் திரும்பும்வரை நீங்கள் போரிடுங்கள். அவர்கள் திரும்பிவிட்டால் நியாமான முறையில் அவ்விரு தரப்பாரிடையே சமாதானம் செய்து வையுங்கள். இதில் நீங்கள் நியாமாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கிறான்.**

-(அல்குர்ஆன் 49.9)

சண்டை பிடித்து அதன்பின் சமாதானம் ஏற்பட்டபின் மீண்டும் சமாதானத்தைக் குழப்பியவர்களுடன் சமாதானத்தை ஏற்படுத்திய அனைவரும் சண்டை செய்ய வேண்டுமென்று இஸ்லாம் பணிக்கிறது. அதன்பின் அவர்கள் வழிக்கு வந்துவிட்டால் அவர்களுடன் நீதியாக நடந்து கொள்ளவேண்டும் என்றும் அது வேண்டுகோள் விடுவிக்கின்றது.

## பயங்கரவாதச் செயலுக்கான தண்டனை

பூமியில் குழப்பங்கள் செய்து பயங்கரவாததத்தை ஏற்படுத்துவோருக்கான உச்சமான தண்டனையை வழங்க வேண்டுமொன்று அல்குர்ஆன் விதித்துள்ளது.

**அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் யுத்தம் தொடுத்தும், பூமியில் குழப்பம் செய்து கொண்டும் திரிக்கின்றவர்களுக்குரிய தண்டனை அவர்கள் வெட்டப்பட வேண்டும். அல்லது சிலுவையிலறையப்பட வேண்டும். அல்லது அவர்களின் கைகளும் கால்களும் மாறாக (ஒருபக்கத்துக் காலும் மறுபக்கத்து கையும்) துண்டிக்கப்படல் வேண்டும். அல்லது நாடு கடத்தப்படல் வேண்டும். இது அவர்களுக்கு இழிவுதரும் தண்டனை ஆகும். மேலும் மறுமையிலோ மகத்தான வேதனையும் அவர்களுக்குண்டு.**

-(அல்குர் ஆன் 5:33)

மேற்கூறிய அல்குர்ஆன் வசனம் மூலம குழப்பம் செய்வோருக்கு பின்வரும் தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

அவர்கள் கொல்லப்படல் வேண்டும் சிலுவையில் அறையப்படல் வேண்டும் காலொன்றும கையொன்றும வெட்டப்படல் வேண்டும் நாடு கடத்தப்படல் வேண்டும்.

வழிப்பறி, கொள்ளையடிதத்ல் போன்ற குற்றச் செயல்களுக்கும் மேற்கூறிய தண்டனையையே இஸ்லாம் விதித்துள்ளது. மேலே கூறப்பட்டுள்ள தண்டனைகள் மிகக்கொடூரமாக இருக்கிறதே எனக் கேடக்லாம். இவ்வாறான தண்டனை யாருக்கு வழங்கப்படவுள்ளது என்பதைச் சற்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மனித சமுதாயத்தின் உரிமையை அழித்து, அமைதியைக் கெடுத்து அவர்களின் சுதநதிரதத்தைத் தடுத்து, அட்டூழியமும அராஜகமும் புரிவோருக்குத் தான் இஸ்லாம் மேற்காணும தண்டனையை வழங்குகிறது.

எனவே, இஸ்லாம் என்றும் பயங்கரவாத்தை விரும்பும் மாரக்க மல்ல, பயங்கரவாதம் உலகை விட்டும் நீங்கி அமைதிப்பூங்காவாக அது ஆக வேண்டும் எனபபாடுபடும் மார்க்கமே இஸ்லாமாகும்.

- மௌலவி எஸ்.எச் ஆதம்பாவா M.A





Please Join our group - "Join For Unity' on FB and support us

Join On Facebook

https://www.Facebook.com/groups/1482216818814345/?ref=share

இது **மக்கள் பனிமனை** யின் மற்மொரு சேவை

Join For Unity இவ் முகநூல் சமய, சமூக புரிந்துணர்வுகளைக் கட்டியெழுப்புவதையும், தவறாண அபிப்பிராயங்களை அகற்றுவதையும் தனது நோக்கமாகக் கொன்டுள்ளது நிங்களும் இவ் முகநூல் பக்கத்தில் இணைவதுடன் உங்கள் சகல நண்பர்களையும், தெரிந்தவர்களையும் இவ் முகநூலில் இணைத்து **நேசக்கரங்களை** பலப்படுத்தலாமே.!


ஒன்றினைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

# “இஸ்லாம்” ஒரு பார்வை

மனிதன் தனது வாழ்வை சரியான முறையில் சீரமைத்துக்கொள்ள அவனுக்கு இரண்டு விஷயங்கள் தேவைப்படுகின்றன.

1.தனது உலக வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காக தனிப்பட்ட முறையிலும், சமூக ரீதியிலும் அவனுக்குத் தேவைப்படும் உலகியல் சாதனங்கள்.

2.தனி வாழ்விலும் சமூகவாழ்விலும் நீதியையும் அமைதியையும் கட்டிக் காத்திடுவதற்கு அவன் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகள் பற்றிய அறிவு

மனிதவாழ்வுக்குத் தேவைப்படும் இந்த இரண்டையும் அதாவது உலகியல் சாதனங்களையும், கொள்கைகள் பற்றிய அறிவையும் மனிதனைப் படைத்த இறைவன் நிறைவாகவே அவனுக்கு அருளியுள்ளான். அவை அனைத்தும் அவன் முன் பரந்து விரிந்து கிடக்கின்றன. அவற்றை அவன் விரும்பியவண்ணம் முழுமையாகப் பயன்படுதத்திக் கொள்ளலாம்.
மனிதனின் ஆன்மகீ, சமூக மற்றும் கலாச்சாரத் துறைகளில் தேவைப்படும் கொள்கைகளை நிறைவு செய்திடுவதற்காக இறைவன் மனித இனத்திலிருந்தே தனது திருத்தூதர்களை அனுப்பினான். இந்தத் திருத்தூதர்கள் வாயிலாக இறைவன் தனது வழிகாட்டுதலை தன் வேதவெளிப்பாடாக (Devine Revelation) அளித்தான்.

அந்த இறைவழிகாட்டுதல், முழுமையான ஒரு வாழ்க்கைத் திட்டமாகும். இந்த வாழ்க்கைத்திட்டத்தின் பெயர்தான் இஸ்லாம்.

இஸ்லாம் என்பது ஓர் அரபிச்சொல்லாகும். கீழ்ப்படிதல், சரணடைதல், அடிபணிதல் ஆகிய பொருள்களை அது குறிக்கின்றது. ஒரு நெறி எனும் முறையில் இஸ்லாம், ஒரே இறைவனுக்கு அடிபணிந்து அவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து நடக்கும்படி வலியுறுத்துகின்றது. இறைவனுக்கு முழுமையாக் கீழ்ப்படிந்து வாழ்வதே இஸ்லாததின் குறிக்கோளாகும். இஸ்லாம் எனும் சொல்லுக்குரிய மற்றொரு அகராதிப்பொருள் “அமைதி” என்பதாகும். உண்மையான ஒரே இறைவனிடம் சரணடைந்து அவனுக்கே கீழ்ப்படிவதால் மட்டுமே ஒருவன் உடல் மற்றும் ஆன்ம அமைதியை அடைந்துவிட முடியும் என்பதை இது அறிவுறுத்துகிறது.

### இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள்

இஸ்லாததின் அடிப்படைக் கொள்கை தவ்ஹீத் - ஏகத்துவம், அதாவது ஓரிறைக் கொள்கையாகும். இதன் கருத்து இதுதான். இந்தப் பேரண்டம் முழுவதும் இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்து. அவனே இப்பேரண்டத்தின் அதிபதியும் ஆட்சியாளனும் ஆவான். இறைவன் ஒருவனே, அவனது மேலாதிக்க உரிமையிலும் அவனது இறைமை அந்தஸ்திலும் அவனுக்கு இணையானவர்கள் - துணையானவர்கள் யாரும் இல்லை. அவனே இப்பேரண்டத்தின் ஆட்சியாளன், பாதுகாவலன், பராமரிப்பாளன், படைப்பாளன், அவனே மனிதனைப் படைத்துள்ளனான். மேலும் ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தப் பூமியின் மதீ வாழ்வதற்கான குறிப்பிட்ட ஒரு கால அளவை அவனே நிர்ணயித்துள்ளான்.

இறைவன் மனிதனுக்கு குறிப்பிட்ட ஒரு வாழ்க்கை நெறியை வகுத்துத் தந்துள்ளான். அந்த வாழ்க்கை நெறியை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சுதந்திரம் கொண்டவனாக மனிதன் இருக்கின்றான். இந்த வாழ்க்கைநெறியை ஏற்றுக்கொண்டு அதற்கு முற்றிலும் இசைவாக வாழ்க்கை நடத்துபவரே முஸ்லிம். அதாவது இறைநெறிக்குப் பணிந்து வாழ்பவர். இந்த வாழ்க்கைநெறியை நிராகரிப்பவர். இறைவனுக்குப் பணிந்து வாழாதவர் - அவனை மறுப்பவர் ஆவார்.

முஹம்மத் (ஸல) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதரே என்றும் இறைவன் ஒருவனே என்றும் மனதார ஏற்று அதனை வாய்மையாக அறிவிப்பதன் வாயிலாக ஒரு மனிதன் இஸ்லாததில் இணைந்துவிடுகின்றான். இஸ்லாததின் இரண்டாவது அடிப்படைக் கொள்கை. இறைத் தூதுத்துவமே ஆகும். இதன் கருத்தாவது வாழ்க்கைக்குத் தேவையான எந்த வழிகாட்டுதலையும் வழங்காமல் மனிதனை இறைவன் விடடுவிடவில்லை. மாறாக அவன் தன் வழிகாட்டுதலை தூதர்கள் வாயிலாகவும் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல) அவர்கள் வாயிலாகவும் வழங்கியுள்ளான். இப்போது ஓர இறைத்தூதரை நமபுகிறோம் எனில் அதன் பொருள் இதுவே. அவர் கொண்டு வந்த தூதை சத்தியமானது என நாம் ஏற்றுக்கொள்கிறோம். மேலும் அவர் வழங்கிய சட்டதிட்டத்தைப் பின்பறறி வாழ்கிறோம். அவர் அறிவுறுத்தியபடியே நம் வாழ்வை நாம் நடத்துகின்றோம்.
இந்தத் தூதுத்துவக் கொள்கை தானாகவே நம்மை இஸ்லாத்தின் மூன்றாவது அடிப்படைக் கோட்பாட்டிற்கு இட்டுச் செல்கின்றது. இந்தக் கொள்கை மரணத்திற்குப் பின்னுளள் வாழ்வின் மீது நம்பிக்கை கொள்வதாகும். இஸ்லாத்தின் கருத்துப்படி இந்த உலகம் ஒரு சோதனைக்களமாகும். இங்கு மனிதன் சோதனைக்குள்ளாக்கப்பட்டு அவன் எத்தன்மை வாய்ந்தவன் என்று மதிப்பிடப்படுகின்றான். மனிதன் இந்த உலகில் செய்கின்ற செயல்கள் எல்லாவறறுக்கும் பதில் சொல்லியே தீர வேண்டும். ஒரு நாள் இந்த உலகம் ஒன்று தோற்றுவிக்கப்படும். அந்தப் புதிய உலகில் மரணத்திற்குப் பின் வருகின்ற அந்த ஆயுள் முடிவடைந்துவிடும். அதன் பிறகு புதிய உலகம் ஒன்று தோற்றுவிக்கப்படும். அந்தப் புதிய உலகில் மரணத்திற்குப் பின் வருகின்ற அந்த மறுமை வாழ்வில்தான். மனிதன் அவனது நற்செயல்களுக்கான வெகுமதியையோ, தயீசெயல்களுக்கான தண்டனையையோ அளிக்கப்பெறுவான். தமது இம்மை வாழ்வில் இறைவனுக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து வாழ்பவர்கள், மறுமைவாழ்வில் நிரந்தரமான சுவனப்பேற்றை அடைவார்கள். இறைவனின் கட்டளைகளை அலட்சியப்படுததியவர்கள், இறைவனுக்கு நன்றியில்லாமல் நடந்து கொண்டதற்காக கசப்பான விளைவுகளை அனுபவிப்பார்கள்.

### இஸ்லாத்தின் எளிமை, அதன் அறிவுப்பூர்வமான நடைமுறைக்கேறற அமைப்பு

இஸ்லாம் புராணங்கள், கட்டுக்கதைகள், ஏதுமில்லாத ஒரு நெறியாகும். அதன் அறிவுரைகள் எளிதானவையும் எளிதில் புரிந்துகொள்ளத் தக்கவையுமாகும். அது எல்லாவித மூடநம்பிக்கைகளையும் விட்டுத் தூய்மையானதாகும். இஸ்லாத்தில் மதகுருமார்களின் ஆதிக்கம்கிடையாது. நடைமுறை வாழ்வுக்கும் மனிதத் தேவைகளுக்கும் தொடர்பில்லாத வெற்று தத்துவங்களுக்கும் பயனற்ற சடங்குகளுக்கும் அதில் இடமில்லை. புரிந்துகொள்ள முடியாத சிக்கலான சடங்குகளும் சம்பிரதாயங்களும் அதில் இல்லை. ஒவ்வொரு மனிதனும் இறைவனின் திருமறையை நேரடியாக அணுகி அதன் வழிகாட்டுதலில் இருந்து பயனடைய முடியும்.
இஸ்லாம் மனிதனின் பகுத்தறியும் ஆற்றலைத் தட்டியெழுப்புகின்றது. அவனை தனது அறிவாற்றலைப் பயன்படுத்துமப்டி தூண்டுகின்றது. எந்த ஒரு விஷயத்தையும் அதன் எதார்தத் நிலையின் வெளிச்சததில் அதன் விரிவான பின்னணியில் பார்க்கும்படி சிந்திக்கும்படி கட்டளையிடுகின்றது.
**என் இறைவா ! என் அறிவை அதிகப்படுததியருள்வாயக** ! (20.114) என்று பிரார்த்திக்கும்படி மனிதனுக்கு திருக்குர் ஆன் அறிவுறுத்துகின்றது. **அறிவில்லாதவர்கள், அறிவுடையோருக்குச் சமமாகமாட்டார்கள்.** (39.9) என்று அது அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றது. **சிந்திக்க மறுப்பவர்களை மிருகங்களைப் போன்றவர்கள் ஏன் அவற்றை விடவும் தாழ்நதவர்கள்** (7:179) என்று அல்குர்ஆன் இடித்துரைக்கிறது.

### உலகியலும் ஆன்மிகமும்

இஸ்லாததின் தனித்தன்மை வாய்ந்த ஒரு சிறப்பம்சம் என்னவெனில் அது வாழ்க்கையை உலகாயுதம் சார்ந்தது. ஆன்மகீம் சார்ந்தது என – ஒன்றோடொன்று இசைந்து போக முடியாத - இரு வேறுபட்ட கூறுகளாய்ப் பிரிப்பதில்லை. அது ஆதரிப்பதில்லை. மாறாக வாழ்க்கையை நிறைவுடையதாக்கிக் கொள்ளும்படி அது வலியுறுத்துகின்றது. துறவு மனப்பான்மையைச் சரியானது என அது ஏற்றுக்கொள்ளவில்லை.
உலகப்பொருட்ளை விட்டு ஒதுங்கி வாழுமப்டி அது மனிதனைக் கேடக் வில்லை. கரடுமுரடான இன்னல் நிறைந்த வாழ்க்கையிலும் இறையச்சத்துடன் வாழ்ந்து மறுமை வெற்றியை- முக்தியை அடையலாம் என்று அது இயம்புகிறது. இறைவன் மனிதகுலத்திற்கு வழிகாட்டிட இறுதியாக அருளிய வேதவெளிப்பாடான திருகுர்ஆன் பின்வருமாறு பிராத்திக்குமப்டி நமக்கு அறிவுறுத்துகின்றது.
“ **எங்கள் இறைவா, இம்மையிலும் எங்களுக்கு நன்மையையே அளிப்பாயாக மறுமையிலும் எங்களுக்கு நன்மையே அளிப்பாயாக !** (2:201)
தனது அருட்கொடைகளை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களை அல்லாஹ் வன்மையாகக் கணடிக்கின்றான்.

**(நபியே) நீர் (அவர்களிடம்) கேளும் அல்லாஹ், தனது அடியார்களுக்காகப் படைத்திட அழகான பொருள்களை உலக சாதனங்களை விலக்கப்பட்டவையாய் ஆக்கியது யார்,** (7:32)
**மேலும் உண்ணுங்கள், பருகுங்கள், ஆனால் வீண் விரயம் செய்யாதீர்கள்.** (7:31) என்று தெளிவாகக் கட்டளையிடுகின்றது. உலகாயுத வாழ்வுக்கும் ஒழுக்க வாழ்வுக்கும், சடத்துவ வாழ்விறகும் ஆன்மீக வாழ்விறக்மிடையே எந்தப் பிரிவினையும் இஸ்லாம் ஏற்றுக் கொள்வதில்லை. அனுமதிப்பதில்லை. தனது வாழ்வை ஆரோக்கியமான அடிப்படைகளின் மீது அமைத்துக்கொள்ள தன் ஆற்றல்கள் வலிமைகள் அனைத்தையும் அர்ப்பணித்திட வேண்டும் ➡07

-6ம் பக்க தொடர்

என்று அது மனிதனுக்கு ஆணையிடுகின்றது. ஒழுக்கச்சக்திகளும் ஆன்மீகச் சக்திகளும் ஒன்றோடொன்று இறுகப் பிணைக்கப் பயன்படுத்தி ஆன்மீக வெற்றியை அடைந்திட முடியும். துறவுவாழ்க்கை நடத்துவதன் வாயிலாக மனிதன் வெற்றிடைந்திட முடியாது என்று அது அறிவுறுத்துகின்றது. மனித வாழ்வின் அமசங்களான உலகாயுதம், ஆன்மீகம் ஆகிய இரண்டுக்குமிடையே ஒரு ஆட்சிபுரிகின்ற சமயக் கருத்தோட்டத்தை சமநிலையைத் தோற்றுவிப்பதை இஸ்லாம் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

உலகில் உள்ளவை அனைத்தும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டுள்ளன. மனிதனோ தன்னைப் படைத்த இறைவனுக்காக! தன்னுடைய அந்த ஏகனான அதிபதியின விருப்பத்தை – கட்டளையை நிறைவு செய்வதே மனிதனின் வாழ்க்கைக் குறிக்கோளாகும். இஸ்லாததின் அறிவுரைகள், மனிதனின் ஆன்மீக உலகியல் தேவைகளை நிறைவு செய்கின்றன. மனிதன் தனது ஆன்மாவைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும்தன் உலகியல் வாழ்வை – தன் தனிப்பட்ட வாழ்வு, கூட்டுவாழ்வு இரண்டையுமே – சீர் திருத்திக் கொள்ள வேண்டுமென்றும் அசத்தியத்தின் வலிமையை அடக்கி, நீதியை நிலைநாட்ட வேண்டுமென்றும் தீமைகளை ஒழித்துக்கட்டி நற்பண்புகளை மலரச் செய்ய வேண்டுமென்றும் அவனுக்குக் கட்டளையிடுகின்றது. இவ்விதம் அது எல்லாவித ஒருதலைப்பட்டசமான தீவிரப் போக்குகளையும் தவிர்த்து நடுநிலையான பாதையைத் தேர்ந்தெடுத்து அதில் உறுதியுடன் நடைபோடச் செய்கிறது.

## முழுமையான வாழ்க்கைநெறி

மதம் என்பதற்கு பொதுவாகவே இன்று தவறான சிதைந்த கருத்து கொள்ளப்படுகிறது. அத்தகைய குறுகிய பொருளில் இஸ்லாம் ஒரு மதம் அல்ல என்பது மனிதனின் தனிப்பட்ட வாழ்வுடன் தொடர்புடையது என்பதை அது ஏற்றுக் கொள்வதில்லை. அது முழுமையானதொரு வாழ்க்கைநெறியாகும். மனிதவாழ்வின் எல்லாததுறைகளையும் அது தழுவி நிற்கிறது. தனிப்பட்ட வாழ்வு, சமூக கூட்டு வாழ்வு உலகாயத வாழ்வு, ஒழுக்க ஆன்மீகவாழ்வு, அரசியல் வாழ்வு, பொருளாதார வாழ்வு ஆகிய அனைத்தையும் அது தன்னுள் கொண்டுள்ளது. சட்டம், கலாச்சாரம், தேசிய சர்வதேச விவகாரங்கள் அனைத்தையுமே அது தழுவி நிற்கிறது. இஸ்லாதத்தை ஏற்கொள்ளும் ஒவ்வொருவர் மீதும் பின்வரும் விஷயத்தை குர்ஆன் கடமையாக்குகிறது.

இஸ்லாம் வழங்கும் அறிவுரைகளின் எந்தப் பகுதியையும் கூறுபோட்டு ஒதுக்கிவிடக் கூடாது. மாறாக, அதனைப் பேணி நடக்க வேண்டும். மதம் என்பது மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கைக்கு உரியயது. சமுதாயப் பண்பாட்டுத்தறைகளில் அதனுடைய ஆதிக்கம் இல்லாதொழிய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்ட நாள். உலக வரலாற்றிலேயே மிக துரதிர்ஷ்டம் வாய்ந்த நாளாகும். நவீனயுகத்தில் சமயத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்த மிகமுக்கிய காரணி, கூட்டுவாழ்க்கையின் மீதான தனது பிடியை அது தானாகவே தளர்த்திவிட்டு தனிப்பட்ட வாழ்க்கையின் குறுகிய வட்டத்திற்குள் முடங்கிச் சென்றுவிட்டதே ! தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டுமே ஆட்சிபுரிகின்ற சமயக் கருத்தோட்டத்தை இஸ்லாம் முழுமையாக நிராகரித்து விடுகின்றது. ஆன்மாவைத் தூய்மைப்படுததுவதும், சமூகத்தின் சீர்திருதத்மும் அதன் புத்தமைப்பும் தான் தனது குறிக்கோள்கள் என்று அது தெளிவாக எடுத்துரைக்கின்றது.

திருக்குர்ஆன் கூறுகின்றது.

**நிச்சயமாக நாம் தூதர்களைத் தெளிவான ஆதாரங்களைக் கொண்டே அனுப்பிவைத்தோம். அத்துடன் அவர்களுக்கு வேதத்தையும் கொடுத்தோம். மனிதர்கள் நேர்மையாக நடந்து கொள்ளும் பொருட்டு (சரியான) அளவுகோலையும் கொடுத்தோம்.**

**இரும்பையும் நாம் படைத்தோம். அதில் பெரும் வலிமை இருக்கிறது. மனிதர்களுக்குப் பல நன்மைகளும் இருக்கின்றன. ஆயினும் அல்லாஹ்வைக் (கண்ணால்) காணாமலேயே (அவனை நம்பி) இதன் மூலம் அவனுக்கும் அவனுடைய தூதருக்கும் உதவி செய்வோர் யார் என்பதை அல்லாஹ் (சோதிதது) அறிந்து கொள்வான்.** (57:25)

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்

“உங்களில் ஒவ்வொருவரும் தனக்குக கீழ்ப்பட்டவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பாளராவீர் அவர்களின் நலன்களைப் பற்றி நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்.ஆகவே நாட்டின் தலைவர், தன் நாட்டு மக்களின் நலன்களைப் பற்றி விசாரனை செய்யப்படுவார்.”

“ஒவ்வொரு மனிதனும் தன் குடுமப்த்தாருக்கு மேய்ப்பாளனாவன். எனவே குடும்பத்தின் ஒவ்வோர் உறுப்பினருடைய நலன் பற்றியும் கேள்வி கேட்கப்படுவான். ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனுடைய குடும்பத்தின் பொறுப்பாளியாவாள். எனவே, அக்குடும்பத்தின் ஒவ்வொருவரின் நலன் பற்றியும் கேள்விக்கணக்குக் கேடக்கப்படுவாள். மேலும் ஒவ்வொரு பணியாளனும் தன் எஜமானனுக்குப் பாதுகாப்பாளனாவான். எனவே அவன் தன் எஜமானனின் சொத்தை (எப்படிப் பாதுகாத்தான் என்பத) பற்றி விசாரனை செய்யப்படுவான்.”

இவ்விதம் இஸ்லாத்தின் அறிவுரைகளை ஒருமுறை மேலோட்டமாகப் பார்ததாலே அது வாழ்வின் அனைத்துத் துறைகளையும் தழுவிய ஒரு வாழ்க்கை நெறி என்றும், தீயசக்தி அடக்கியாணடிடும் வகையில் மனிதவாழ்வின் எந்த ஒரு துறையையும் அது விட்டுவிடவில்லை என்றும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

## தனிவாழ்வுக்கும் பொதுவாழ்வுக்குமிடையே சமநிலை உருவாக்குதல்

இஸ்லாம் இறைவனால் வழங்கப்பட்ட உண்மையான மார்க்கமாகத் திகழ்வதால், அது தனிநபர் வாழ்வுக்கும் கூட்டு வாழ்வுக்கும் இடையே சமநிலையை மிக ஆக்ககரமான முறையில் - மிகுந்த பயனளிக்கும் விதத்தில நிலைநாட்டுகின்றது. அது மனித ஆளுமையில் தனிப்பட்ட முறையில் நம்பிக்கை வைத்திருக்கின்றது. மனிதர்கள் அனைவரையும் தனிப்பட்ட முறையில் தமது செயல்களுக்குப் பொறுப்பாளர்களாகவும் இறைவன் முன் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாகவும் கருதுகின்றது. இஸ்லாம் தனிமனிதனின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கின்றது. அவற்றைத் தடை செய்திடவும் பறித்திடவும் எவரையும் அது அனுமதிப்பதில்லை. மனித ஆளுமையின் வளர்ச்சியை அது தனது கல்விக்கொள்கையின் தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சமூகத்தில் அல்லது அரசில் மனிதன் தனது ஆளுமையை இழந்திட வேண்டும் என்கிற கருத்தை இஸ்லாம் ஏற்றுக் கொள்வதில்லை. அதே நேரத்தில்அது மனிதனுள் ஒருவிதப் பொறுப்புணர்வைத் தோற்றுவிக்கின்றது. மனிதர்களை ஒரு சமூகத்தினுள்ளும் அரசினுள்ளும் ஒன்று திரட்டி அமைப்பு ரீதியாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகின்றது. சமூக நன்மைக்குத் தனது பங்கை ஆற்றிடும்படி தனிமனிதனுக்குக் கட்டளையிடுகின்றது.

இஸ்லாத்தில் தொழுகை கூட்டாக நிறைவேற்றப்படுகின்றது. அது முஸ்லிம்களிடையே சமூக ஒழுங்கையும் கட்டுப்பாட்டு உணர்வையும் வளர்க்கின்றது. ரமளான் நோன்பு முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக ஒரே நேரத்தில் வைப்பதங்கென்றே உள்ளதாகும். இந்த அரிய ஏற்பாடு தனிநபர் மற்றும் சமுதாயத்தினுடைய நலன்களை அடைய வழிகோலுகிறது.

ஜகாத் (தன்சொத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட விகிதத்தை இறைவழியில் செலவழித்தல்) திட்டமிட்ட முறையில் விநியோகிக்கப்பட வேண்டுமென்பதற்காக அதனைக் கூட்டான முறையில் வழங்கிட முயற்சிகள் மேற்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. ஹஜ் கடமை அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்தில கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

சுருக்கமாகக் கூறின் இஸ்லாம் தனிமனிதனையும் அலட்சியப்படுதத்வில்லை. சமூகநலன்களையும் புறக்கணிக்கவில்லை. இரண்டுக்குமிடையே இணக்கமான சமநிலையை ஏற்படுத்துகின்றது.

## அனைத்துலகத் தன்மையும் மனிதாபிமானமும்

இஸ்லாததின் செய்தி மனித இனம் முழுவதற்கும் உரியதாகும். இஸ்லாத்தின் பார்வையில் இறைவன் “ **உலகங்கள அனைத்திற்கும் இறைவன் ஆவான்.** (அல்குர்ஆன் 1:1) இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மனிதகுலம் முழுவதற்கும் இறைத்தூதராவர். திருக்குர்ஆன் இதனைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது. **மக்களே நான் உங்கள் அனைவருக்காகவும் அனுப்பப்பட்டுள்ள இறைத்தூதராவேன்.** (7:158) **அவர் அகிலத்தார் அனைவரையும் அச்சுறுத்தி எச்சரிப்பவர் ஆவார்.** (25:1) **மேலும் உம்மை அகிலத்தார் அனைவருக்கும் ஓர் அருட்கொடையாகவே நாம் அனுப்பி வைத்துள்ளோம்.** (21:107) இல்லாத்தின் பார்வையில் மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே! அவர்களுடைய நிறம் மொழி, இனம், தேசியம் ஆகியன. எதுவாயிருந்தாலும் சரியே ! அது மனித சமுதாயத்தின் மனச்சான்றை முன்னிலைப்படுத்திப் பேசுகின்றது. இனம், அந்தஸ்து, செல்வம் ஆகிய எல்லாவித தடைக் கற்களையும் தகர்ததெறிகின்றது. இத்தகைய தடைகள் உலகில் எப்போதும் இருந்து வருகின்றன. இதனை எவரும் மறுக்க முடியாது. இஸ்லாம் இந்தக் தடைகளையெல்லாம் அகற்றி மனித சமுதாயம் முழுவதும் இறைவனின் ஒரே குடும்பம் என்கிற கருத்தோட்டத்தை அளித்தது.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்

“இறைவனின் படைப்புகள் அனைத்தும அவனது குடும்பமே ! இறைவனிடம் மிகுந்த அன்புக்குரியவன் அவனது படைப்பினங்களை அதிகம் நேசிப்பவனே ஆவான்.”

“என் இறைவா ! என் உயிருக்கும் அகிலத்திலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் அதிபதியே ! மனிதர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரர்களே என்று நான் உறுதிமொழி கூறுகின்றேன்.”

“இறைவனின் வழிமுறைகளுக்கு மதிப்பளியுங்கள் ! அவனது குடும்பத்தின் (மனித இனத்தின்)மீது அன்பு செலுத்துங்கள”

இஸ்லாம் தனது நோக்கிலும் அணுகுமுறையிலும் சர்வதேசத்தன்மை வாய்ந்ததாகும். எந்தவகையான தடைகளையும் பாகுபாடுகளையும் அனுமதிப்பதில்லை. அது மனித சமுதாயம் முழுவதையும் ஒரே பார்வையின் கீழ், கொள்கை நெறியின கீழ் ஒன்றுபடுத்த விரும்புகின்றது. இவ்விதம் இஸ்லாம் ஒரு முழுமையான ஒருங்கிணைந்த அனைத்துத் துறைகளையும் தழுவிய, சமநிலை தவறாக வாழ்க்கை நெறியாக விளங்குகின்றிது.

ஒன்றினைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

# 2 ஆம் குடியரசு அரசியலமைப்பு - (1978) வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள்

புதிய அரசியலமைப்பு உருவாக்கும் முயற்சியில் தற்போதய அரசு முயற்ச்சிப்தாகக் கூறும் இவ்வேலையில், இவ் அரசியல் அமைப்பு 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 2 ஆம் குடியரசு அரசியலமைப்பு . இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு என்றே அறிமுகப்படுத்தப்படடுள்ளது.

2 ஆம் குடியரசு யாப்பின் முக்கிய அம்சங்கள் வருமாறு

•மக்கள், அரசு, இறைமை
•பௌத்த மதம்
•அடிப்படை உரிமைகள்
•மொழி
•பிரஜா உரிமை
•அரச கொள்கையின் வழிகாட்டிக் கோடப்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும்
•குடியரசு ஜனாதிபதி
•பாராளுமன்றம்
•அமைச்சரவை
•மக்கள் தீர்ப்பு
•அரசியலமைப்பைத் திருத்துதல்
•நீதித்துறை
•நிஜவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒமப்புட்ஸ்மன்)
•விகிதாசார தேர்தல்
•மாகாணசபை முறை
•உள்ளுராட்சி சபைகள்
•பாராளுமன்றப் பேரவை
•இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

**மக்கள், அரசு, இறைமை**

2 ஆம் குடியரசு யாப்பின் முதலாம அத்தியாயம் மக்கள், அரசு, இறைமை சமபந்தமாகக் கூறுகின்றது. இலங்கை சுதநதிரமும இறைமையும் தன்னாதிக்கமும கொண்ட ஜனநாயக சோசலிசக் குடியரசு என்றும ஒறன்றயாட்சி அரசு என்றும் கூறப்பட்டுள்ளது. இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும் பராதீன்படுத்த முடியாததாகவும் இருக்கும என்பதுடன் இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை என்பவற்றை உள்ளடக்கும். மக்களின் சட்டவாக்க அதிகாரம் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும் மக்கள் பாதுகாப்பு உள்ளிட்ட மக்களின் நிறைவேற்றும மக்களால் தெரிவு செய்யப்பட்ட குடியரசு ஜனாதிபதியால் பிரயோகிக்கப்படும்.
மக்களின் நீதித்துறை அதிகாரம பாராளுமன்றம தொடர்பான விடயங்களில் பாராளுமன்றத்தாலும் ஏனைய விடயஙக்ளில் அரசியலமைப்பு மற்றும சட்டங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட நீதிமன்றங்கள், நியாய சபைகள், நிறுவனங்கள் மூலமும் பிரயோகிக்கப்படும். இவ்வாறு மக்களின் இறைமை பிரயோகிக்கப்படும் விதம் விபரிக்கப்பட்டுள்ளது.
யாப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளானது யாப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதைத் தவிர வேறெந்த வகையிலும் குறைக்கப்படவோ மட்டுப்படுதத்ப்படவோ கூடாது.
இலங்கைக் குடியரசின் ஆள்புலமானது யாப்பில் கூறப்பட்டுள்ள 25 நிருவாக மாவட்டங்களையும் அதன் ஆள்புல நீரப்பரப்புக்களையும் கொண்டிருக்கும்.
குடியரசின் தேசியக் கொடி யாப்பில் கூறப்பட்டுள்ளவாறு சிங்கக் கொடியாக இருக்க வேண்டும்.
தேசிய கீதம் யாப்பில் சொல்லப்பட்டவாறான அமைப்பைக் கொண்ட “சிறீ லங்கா தாயே” என்பதாகவும் தேசிய தினம் பெப்ரவரி 4 ஆம் திகதியாகவும் இருக்க வேண்டும்.

**அடிப்படை உரிமைகள்**

அரசியலமைப்பின் 3 ஆம் அத்தியாயம் அடிப்படை உரிமைகள் பற்றிக் கூறுகிறது. முன்னரை விட இந்த யாப்பில் உரிமைகள் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்புப் பொறிமுறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்வுரிமைகள் வருமாறு.

**சரத்து – 10**

ஆள் ஒவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராக இருப்பதற்கான அல்லது மேற்கொள்வதற்கான சுதந்திரம் உட்பட, சிந்தனை செய்யும் சுதநதிரம், மனசாட்சியைப் பின்பற்றும் சுதநதிரம், மத சுதநதிரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**சரத்து – 11**

ஆளெவரும் சித்திரவதைக்கு, அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது.

**யாப்பின் 12 ஆம் சரத்து பின்வரும் உரிமைகளைப் பற்றிக் கூறுகிறது**

•சட்டத்தின் முன் ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள் என்பதுடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கும் உரித்துடையவர்கள்.

•இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற்கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரஜையையும் ஓரங்கட்டுதல் கூடாது.

•எவரும் இனம், மதம், மொழி, சாதி, பால் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும், கடைகள், பொது உணவுச்சாலைகள், விடுதிகள், பொதுக்களியாட்டவிடங்கள், தனது மதத்துக்குரிய பொது வழிபாட்டிடங்கள் என்பவற்றிற்குச் செல்லுதல் தொடர்பில் ஏதேனும் தகுதியீனத்துக்கோ பொறுப்புக்கோ மட்டுப்பாட்டுக்கோ நிபந்தனைக்கோ உட்பட்டவராதல் கூடாது.

• இவ்வுறுப்பரையினுள்ள எதுவும், பெண்கள் அல்லது பிள்ளைகள் அல்லது இயலாமையுள்ள ஆட்களின் முன்னேற்றத்துக்காக சட்டத்தின் மூலம், துணைநிலைச் சட்டவாக்கத்தின் மூலம் அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பு ஏற்பாடு செய்யப்படுவதைத் தடுத்தலாகாது.

**யாப்பின் 13 ஆம் சரத்து பின்வரும் நீதி உரிமைகளை வழங்குகிறது**

•சட்டப்படியன்றி எவரும் கைது செய்யப்படலாகாது. கைது செய்யப்படுவதற்கான காரணம் கைது செய்யப்படுபவருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

•கட்டுக்காவலில் வைத்திருக்கப்படும். தடுத்து வைத்திருக்கப்படும் அல்லது வேறு வகையில் சொந்தச் சுதநதிரம் பறிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும், சட்டப்படி மிக அண்மையிலுள்ள தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி முன்னிலையில் கொண்டுவரபப்ட வேண்டும என்பதுடன், சட்டப்படி அந்நீதிபதியினால் ஆக்கப்படும் கட்டளைப்படியன்றியும் அதன் நியதிகதிகளின்படியன்றியும் தொடர்ந்தும் கட்டுக்காவலில் வைத்திருக்கப்படுதலோ தடுத்து வைக்கப்படுதலோ சொந்தச் சுதந்திரம் பறிக்கப்படுதலோ ஆகாது.
•தவறொன்றுன்னுன் குற்றஞ்சாட்டப்படும் எவரும் குறித்த நீதிமன்றமொன்றினால் நடாத்தப்படும நியாயமான விளக்கத்தில் அவர் நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலமோ பேசுவதற்கு உரித்துடையவராக வேண்டும்.
•சட்டப்படி குறிதத் நீதிமன்றக் கட்டளைப்படியன்றி, எவரும் மரண தண்டனையினால் அல்லது சிறைத் தண்டனையினால் தண்டிக்கப்படக் கூடாது. புலனாய்வு அல்லது விளக்கம் முடியும் வரையில் ஆளொருவரைக் கைது செய்த வைத்திருத்தல், கட்டுக்காவலில் வைத்திருத்தல், தடுத்து வைத்திருத்தல அல்லது அவரது சொந்தச் சுதநதிரதத்தை வேறு வகையில் பறித்தல் தண்டனையாக அமையலாகாது.
•ஒவ்வொருவரும் அவர் குற்றவாளியென நிரூபிக்கப்படும் வரை சுத்தவாளியாகக் கருதப்பட வேண்டும். குறிப்பிட்ட நிகழ்வுகளை நிரூபிப்பதற்கான பொறுப்பை குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் மதீ சட்டம் சுமத்தலாம்.
•புரியப்பட்ட நேரத்தில் தவறொன்றாக இல்லாத ஏதேனும் செயல் அல்லது செய்யாமை காரணமாக ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கூடாது என்பதுடன் அத்தவறு புரியப்பட்ட நேரத்தில வலுவிரிந்த தண்டத்திலும் பார்க்க கடுமையான தண்டம் எதுவும் அத்தகைய தவறுக்கு விதிக்கப்படவும் கூடாது.

**ஒவ்வொரு பிரசையும் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவர்**

•வெளியிடுதல் உட்பட பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவிக்கும் சுதநதிரமும்
•அமைதியான முறையில் ஒன்று கூடுவதறக்ான சுதந்திரம்
•ஒருங்கு சேர்வதற்கான சுதநதிரம்
•தொழிற் சங்கமொன்றை அமைக்கவும் அதில் சேரவுமான சுதந்திரம்
•தனியாகவோ மற்றவர்களுடன் சேர்ந்தோ பகிரங்கமாகவோ அந்தரங்கமாகவோ தனது மதத்தை அல்லது நம்பிக்கையை வழிபாட்டிலும் அனுசரிப்பிலும் சாதனையிலும் போதனையிலும் வெளிக்காட்டுவதறக்ான சுதந்திரம்
•தனியாகவோ ஏனையவர்களுடன் சேர்ந்தோ தனது சொந்தக் கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் மேம்படுதத்துவதற்கும், தனது சொந்த மொழியைப் பயன்படுதத்துவதற்குமான சுதநதிரம்
•ஏதேனும் சட்டப்படியான முயற்சியில், உயரதொழிலில், வியாபாரத்தில், தொழிலில் அல்லது தொழில் முயற்சியில் தானாகவோ ஏனையவர்களுடன் சேர்ந்தோ ஈடுபடுவதற்டகான சுதந்திரம்
•இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதறகும், தான் விரும்பிய இடதில் வசிப்பதற்குமான சுதநதிரம்
•இலங்கைக்கு திரும்பி வருவதற்கான சுதந்திரம்

இவ்விதம் 2 ஆம் குடியரசு யாப்பில் உரிமைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ள போதிலும் உயிர் வாழும் உரிமை. கல்வி கற்கும் உரிமை, சொத்துரிமை, குழு உரிமை போன்ற மிக முக்கிய உரிமைகள் குறிப்பிடப்படாததுடன் இவ்வுரிமைகளின் மட்டுப்படுத்தல் ஏற்பாடுகளானது உரிமைகளின் நடைமுறைப் பிரயோகத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது.

- முகுசீன் றயீசுத்தன் B.A





உங்கள் படைப்புக்களும் நேசக்கரங்களில் இடம்பெற வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

நேசக்கரங்கள்
மக்கள் பணிமனை
இல-83, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை

0777381033




ஒன்றினைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

# மனங்களைப் பாருங்கள் மதங்களைப் பாராதீர்கள்

1970 களின் பிற்கூறு. யாழ் ஒஸ்மோனியா கல்லூரி மைதானம் திரள் திரளாக மக்கள் கூட்டம் முஸ்லீம் மக்கள் பெரிதும் வாழும்..... கல்வி கற்கும்.... பாடசாலை மைதானத்தில் யாழ்ப்பாணத்தின் குக் கிராமங்களில் இருந்து கூட மக்கள் வெள்ளமாய் திரண்டு வந்திருந்தனர்.... வந்து கொண்டு இருக்கின்றனர்....

ஒன்று இரண்டு நாட்கள் அல்ல ஒரு வாரமாக...!

ஆமாம் நசீர் என்ற முஸ்லீம் இளைஞர் உலக சாதனை ஒன்றை செய்து முடிப்பதற்காக இடையறாது நடனமாடிக் கொண்டு இருக்கின்றார்.

அன்றைய காலகட்டத்தில் இந்த உலக சாதனையை நிலை நாட்டுதல் என்பது ஆபூர்வமானதாகவும் ஒருவகை மன உறுதிக் கொண்டாட்டமாகவும் பார்க்கப்பட்ட கால கட்டம்.

பொட்டு வைத்தவர்கள், புடவை கட்டியவர்கள், வேட்டி கட்டியவர்கள், தலையை மறைத்து பர்த்தா அணிந்தவர்கள், குர்த்தா போட்டவர்கள், அரை சட்டையணிந்து நவநாகரீக இளம் பெண்கள்... ஆண்கள்... என்று பலரும் ஒன்றாக இணைந்து சாதனைப் புரிவதற்காக... ஹின்னஸ் புத்தகத்தில் பதியப்படுவதற்காக நடனமாடிக் கொண்டிருந்த அந்த இளைஞனை உற்சாகப்படுத்த மத்தியான வெயில் தொடக்கம் ஊர் உறங்கும் சாமம் வரை இடையறாது இணைந்து செயற்பட்டு உற்சாகம் கொடுத்த தருணங்கள். நானும் அதில் ஒருவனாக இளைஞனாக... நானும்.

இறுதியில் அந்த இளைஞர் உலக சாதனை ஒன்றை அதிக நேரம் தொடர்சியாக நடனமாடியவர் என்று தனது சாதனையை நிலைநாட்டிக் கொண்டார்.

அவரின் திறமையை அங்கீகரிக்கும் முகமாக... சகோதரத்துவத்தை மதிக்கும் ஏற்பாடாக அன்றைய யாழ் மாநகர சபை, நிரந்தர வேலை ஒன்றிற்கான வாய்பையும் மாநகர சபையில் ஏற்படுத்திக் கொடுத்தது.

இது பல செய்திகளை சமூகங்களுக்கிடையேயான சகோதரத்துவத்தின் மகிமையை அதனைத் தூக்கிப்பிடிக்கும் நிகழ்வாக அன்று மட்டும் அல்ல இன்றுவரை பார்க்கப்படுகின்றது.

1989 ஜுன் மாதமளவில் யாழ்ப்பாணம் வவுனியா போன்ற பகுதிகளுக்கு போக்குவரத்து செய்யமுடியாது என்ற மிகவும் கடினமான இராணுவக் கெடுபிடி நிறைந்த நாட்கள்...

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவனுக்கும் வவுனியா பெண் ஒருவருக்கும் திருமணம். அதுவும் வவுனியாவில். மாப்பிள்ளை வீடாக வவுனியாவில் ஒரு கத்தோலிக்க குடும்பத்தின் வீட்டை புதிதாக கட்டி குடி புகுந்து ஒருவாரத்தில் தற்காலிகமாக மாப்பிள்ளை வீடாக பாவிப்பதற்காக கொடுப்பதாக முடிவு நட்பு அடிப்படையில்.

மாப்பிள்ளை இளைஞன் பிறப்பால் இந்துவாக இருந்தாலும் எந்த மத நம்பிக்கையும் அற்றவன் பெண்ணும் அவ்வாறே. ஆனால் சுற்றி நிற்கும் அன்புள்ளங்களின் வேண்டுகோள்களை மறுதலிக்க முடியாத சூழலில் திருமணம் என்பது இருவரது சந்தோஷங்களை மட்டும் அடிப்படையாக கொண்டது அல்ல சுற்றம் சூழலின் ஒரு சமூகத்தின் சந்தோஷங்களாக அமைய வேண்டும் என்ற அடிப்படையில் இந்து சமய சடங்கு அடிப்படையில் நடைபெற முடிவாயிற்று.

காலை ஏழு மணியிற்கு மாப்பிள்ளை எழுந்து வழமையான பால் அறுகு வைத்து குளித்து மாப்பிள்ளை உடையணிந்து நெற்றியில் பட்டையாக மூன்று குறியிட்டு பொட்டு வைத்து தலைபாகை வைத்து பெண் வீட்டிற்கு... மண வீட்டிற்கு மாப்பிளையாக அழைத்து செல்ல முன்பு சாமியை கும்பிட்டுவிட்டு புறப்படுவதற்கு ஆயத்தம்....

அந்த கந்தோலிக்க நண்பர்களது புது வீட்டின் சாமித் தட்டில் யேசு நாதர், மேரி அம்மாவின் படங்களை அகற்றிவிட்டு இந்துக் கடவுள்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. இதனை அந்த இளைஞன் கவனக்க தவறவில்லை.

இதனை அந்த வீட்டின் கத்தோலிக பெரியவர்... வீட்டவர் தாமாக செய்திருந்தனர் என்பதை அந்த இளைஞன் அந்த திருமணப் பரபரப்பிலும் அறிந்து கொண்டான். அகற்றப்பட்ட மேரி மாதா, யேசு பிரானின் படங்களையும் வரவழைத்து அனைத்தையும் அங்கு வைத்து பலரின் விருப்பப் படி சாமி கும்பிட்டுவிட்டு திருமண பந்தத்தில் இணைந்தும் கொண்டான்.

அந்த திருமண வீட்டிற்கான முழு விருந்தையும் சமைத்துப் படைத்தவர்கள் மன்னாரில் இருந்து வந்து இரு முஸ்லீம் சகோதரர்கள். முழுவதும் சைவச் சாப்பாடாக.... திருமண நிகழ்வை ஒளிப்பதிவு செய்தவர் அனுரரதபுரத்தில் இருந்து வந்திருந்து பௌத்த இளைஞன். இவையெல்லாம் திட்டமிட்டு நடைபெற்றன அல்ல தற்செயலாக மன எற்புடன் நடைபெற்றன.

இங்கெல்லாம் 'சண்முகா' என்ற பிரிவினைவாத வெறுப்புச் செயற்பாடுகள் இருக்கவில்லை.

1975 களில் புத்தளத்தில் உள்ள தனது முஸ்லீம் நண்பரை சந்திப்பதற்காக தனது அக்காவுடன் பாடசாலை விடுமுறையில் புத்தளத்தில் தங்கி நின்றவர் நாலு தெரு தள்ளிச் செல்கின்றார்.

யாழ் இந்துவில் ஒரு வகுப்பு வித்தியாசத்தில் மாணவர் விடுதியில் ஒன்றாக கல்வி கற்கும் மாணவர்கள் இவர்கள். அக்காவுடன் தங்கி இருப்பவர் பிறப்பால் இந்து மற்றையவர் சொல்லாமலே புரிந்திருக்கும் புத்தளத்தை பிறப்பிடமாக கொண்ட முஸ்லீம் இனத்தவர்.

மாணவ விடுதியில் தினமும் காலைத் தேனீர் வேளை தேவாரம் பாடும் போது சகலரும் எழுந்து நின்று கடைப் பிடித்த ஒழுங்கை பின்பற்றிய முஸலீம் சகோதரர்கள் இலங்கை பூராக இருந்து வந்திருந்து கல்வி கற்றவர்களே.

புத்தளத்தின் அந்த மசூதி மிகவும் பிரசித்தமானது என்பதை பல இலங்கையரும் அறிவர். அதுவும் அந்த மணிக் கூட்டுக் கோபுரத்துடன் அமைந்து அந்த மசூதியை வாழ்நாளில் ஒரு தடவையாவது தரிசிக்க வேண்டும் என்று மக்காவை போல் சகல இனத்தவரும்... மதத்தவரும் விரும்பும் இடமாகும்.

ஆனால் இஸ்லாமிய மதக் கோட்பாட்டின்படி இஸ்லாமிய மதத்தை சாராத ஒருவரை மசூதியிற்குள் அழைத்துச் செல்வது என்பதில் இருந்த 'தடைகளை' ஒரு வெள்ளைச் சாரத்தை எனது நண்பர் என்னிடம் கொடுத்து அதனை கணுக்கால் தெரியும் அளவிற்கு உயர்த்திக் கட்டச் சொல்லி குல்லாவும் அணிவித்து அந்த பள்ளியிற்கு தொழுகையுடன் கூடிய மணிக் கூட்டுக் கோபுரத்தை காட்டிய நினைவுகள் இன்றும் பசுமையாக....

அந்த நண்பன் ஹினாயத்துல்லாவை இன்றுவரை தேடி அலையும் முதுமை வயதில் தற்போது.

மனதில் இருந்து உருவான மத நல்லிணக்கங்கள் இவை.

கண்டி தலதா மாளிகையிற்குள் செல்ல வேண்டும். இலங்கைப் பௌத்த கலாச்சார ஆண்கள் உடையாக கால்கள் முழுவதையும் மறைத்த சாரம் கணக்காக வேட்டி ஒன்றை கட்டிச் செல்லுங்கள் என்ற பணிப்புரை மாளிகையின் வாசலில்.

இது பௌத்த மக்களின் கலாச்சரத்தின் பண்புகள் வேண்டுதல்கள். அதனை அனுசரித்து வேட்டி ஒன்றை வாசலில் பெற்று அணிந்து உள்ளே சென்று புத்த பெருமானை தரிசித்து வந்தவர்கள் நாம். இதுவும் மத நல்லிணக்கத்திற்காக உருவாக்கப்பட்ட உணர்வுகள்.

2018 ஆண்டு திருகோணமலை கோணேசர் கோவில். மத நம்பிக்கைகளுக்கு அப்பால் அந் சூழலை கோவிலை ஒரு பண்பாட்டின் அடையாளத்தை தரிசிக்க சென்ற தருணம் கோவிலுக்குள் உட்புகும் போது தொப்பியை கழட்டி விட்டு உள்ளே போங்கள் என்ற போது ஆண்களாகிய நாம் மேற்சட்டையையயும் கழட்டிவிட்டு உள்ளே சென்று தரிசனம் செய்த நிகழ்வுகள். எந்த இந்து கோவிலுக்குள் செல்லும் போதும் இந்த வழக்கத்தை உடையவர்(ன்)கள் நாம்(ன்).

இதுவல்ல முக்கியம்....? தரிசனம் முடிந்து படிகளில் கோவிலில் இருந்து வெளியேறி இறங்க.... படிகளில் எம்மை நோக்கி.... கோவிலை நோக்கி... நகர்ந்து கொண்டிருந்தனர் ஒரு கூட்டம் அதில் உடல் முழுவதும் தலை முழுவதும் மறைத்தபடி முஸ்லீம் பெண்களும் ஆண்களும் கூடவே கிறிஸ்துவ கன்னியாஸ்திரிகளும் வந்து கொண்டிருந்தனர்.(இதனை எனது பயணக் கட்டுரையில் நான் சிலாகித்து ஏலவே எழுதியும் உள்ளேன் நாலு வருடங்களுக்கு முன்பு).

பொதுவாக இந்துகள் ஏனைய மதத்தினரின் வழிபாட்டு தலங்களுக்கு போவதில் எந்த தடைகளையும் தயக்கங்களையும் தமது மதக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டிராதபடியால் இயல்பாக பள்ளிவாசல், தேவாலயம், விகாரை என்று எங்கும் செல்வார்கள்.

ஆனால் இஸ்லாமியர்கள், கத்தோலிகர்கள் அவ்வாறு செயற்படுவது குறைவு. அவர்கள் நம்பும் மத மார்க்கங்கள் இதில் சில ஒழுங்கு முறைகளை கொண்டிருப்பதால் அவர்கள் தயங்குவதாக நான் உணருகின்றேன்.

ஆனாலும் எவ்வாறு இந்த கோணேசர் ஆலயத்திற்குள் இந்துகள் அல்லாதவர் தேடி தமது தரிசனங்களை மேற்கொள்ள வருகின்றனர் என்பது ஒரு இயல்பான நடவடிக்கையாகவும் ஒரு மத நல்லிணகத்திற்கான செயற்பாடுகளாகவும் மட்டுமே என்னால் பார்க்க முடிந்தது முடிகின்றது.

இவற்றைத்தான் நாம் திருகோணமலையில உள்ள சண்முகா வித்தியாலம் விடயத்தில் நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றோம்.

ஒரு மனிதர் ஒரு ஆசிரியர் பொது வெளியில் சமூக ஏற்புடமையான உடையை அணிதல் என்ற வரையறைக்குள் அவர்கள் நம்பும் கலாச்சாரம் மத நம்பிக்கையின் அடிப்படையில் உடையணிதல் என்பது அவர் அவர் விருப்பம். இந்த சுதந்திரத்தில் நாம் தலையிட முடியாது... தலையிடக் கூடாது. இவ்வாறுதான் உடையணிய வேண்டும் என்று வற்புறுத்துவது அதற்காக போராட்டங்களில் ஈடுபடுவது சரியானது அல்ல.

இந்துக் கோவில்களின் குறிப்பிட்ட ஒரு பகுதியிற்குள் தெய்வத்திற்காக பறை அடிப்பவர்கள் கூட போக முடியாது என்ற வரையறையை நாம் முதலில் உடைத் தெறிவோம். யாவரும் இந்த சன்னிதானங்களில் பாடசாலைகளில் சமம் என்ற உணர்வலைகளை ஏற்படுத்துவோம் அவரவர் மத கலாச்சார நம்பிக்கைகளுக்கு மதிபளிப்போம். இதற்குள் ஆடை அணிதலும் அடங்கும்.

மத மன நல்லிணக்கத்தை விரும்பும் ஏற்படுத்த முயலும் நாம் யாவரும் பிறரின் நம்பிக்கைகள் கலாச்சார மத நம்பிக்கைகளை மதித்து செயற்பட வேண்டும். அதுதான் இந்த மன நல்லிணத்திற்கான அடிப்படையாக இருக்க முடியும்.

ஒரு ஆசிரியராக அவரின் செயற்பாடுகள் சிறப்பாக நெறிமுறையாக இருக்கின்றனவா என்று பார்க்கப்பட வேண்டுமே ஒழிய அவர்களின் மத அடையாளங்கள் அது சார்ந்த உடைகள் பார்க்கப்படக் கூடாது.
பதிவின் ஆரம்பத்தில் கூறியது போன்ற அனுபவங்கள் எம்மில் பலருக்கும் ஏற்பட்டிருக்கும். ஏன் இதற்கு எதிர் மறையான அனுபவங்களும் ஏற்பட்டிருக்கலாம்.

மத நல்லிணக்கமும் இன நல்லிணக்கமும் ஏற்படுத்துவதே எது நோக்கும். மனித நேயத்தையும் சகோதரத்துவத்தையும் அறம் சார்ந்து நிலை நாட்டுவது வாழ்தலின் அத்தியாவசியமாகவும் சரியாககவும் இருக்க வேண்டும்.

வாழ்கையில் ஏற்படும் முரண்பாடுகளை இது போன்ற மத கலாச்சார முரண்பாடுகளை பகை முரண்பாடாக பார்க்காதீர்கள். மாறாக இவற்றை நட்பு முரண்பாடுகளாக பார்த்து பேசி அளவளாவி தீர்வுகளை காண்போம். இதன் மூலம் மனித நேயத்தை சகோதரத்துவத்தை வளர்த்துக் கொள்வோம்.

மனங்களை பாருங்கள் மதங்களை பாராதீர்கள்.

- சிவா முருகப்பிளை

ஒன்றிணைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

# சமாதானத்திற்கு மதங்கள் எதிரானதா?

**இலங்கை நாட்டில் வாழ்வியல் யதார்த்தம் மதங்களின் தோல்வியா? அல்லது மதங்களைப் பின்பற்றுகியவர்களின் தோல்வியா?**

உலகத்திலே இருக்கக் கூடிய நான்கு உயர்நத் மதங்களைக் கொண்டது இந்த நாடு. இப்படிப்பட்ட ஒரு நாட்டில் தான் வன்முறைகளும் அநீதிகளும் பாராபட்சங்களும் இன்று வரை தொடர்கதையாக உள்ளன. இந்த மதங்களின் போதனைகளும் படிப்பினைகளும் தோற்றுப் போய்விடட்னவா? என்ற கேள்வி இன்று எழுகின்றது. நிச்சியமாக இது மதங்களின் தோல்வியல்ல மாறாக மதங்களைப் பின்ாற்றுகிறவர்களின் தோல்வி தான்.
இன்று மதங்களுக்கிடையில் ஏற்பட்டுளள் நெருக்கடி நிலைகளால், குறிப்பாக சிறுபான்மை மதங்கள் எதிர் கொள்ளும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றால் இந்த நாட்டில் மதவாதம் தலைதூக்கியுளள்தோ என்ற அச்சம், ஐயம், ஆதங்கம், நல்மனம் கொண்ட அனைவர் மத்தியிலும் ஏறப்ட்டுள்ளது. இப்படியான ஒரு சூழ்நிலையில் மததத்லைவர்கள் மற்றும் சமூகத்தலைவரக்ள் நமது வாழ்வில் நமது செயற்பாடுகளை மீள்பரிசலீனை செய்ய வேணடியவர்களாக சுய விமர்சனத்திற்கு உள்ளாகக் வேணடியவர்களாக உள்ளோம்.

மனித மனங்களில் யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது இன்று இந்த நாட்டில் யுத்தம் முடிவடைந்துவிடட்து என்று சொல்லப்பட்டாலும் யுத்தத்தின் சத்தங்கள் மட்டும் தான் இன்று இல்லை. துப்பாக்கி வேட்டுக்கள் இன்று ஓய்ந்துள்ளன. ஆனால் இன்னமும் ஓர் யுத்தம் தொடர்நது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுதான் உள்ளார்த்த யுத்தம். மனித மனஙக்ளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த யுத்தத்தை நாம் எப்படி? எப்போது? நிறுக்கப்போகின்றோம்? எரிமலை ஒன்றை வெளியில் இருந்து பார்த்தால் அது அமைதியாக சாதாரணமாக நமக்குத் தெரியும்.

ஆனால், அது உள்ளே கனன்று குமுறிக் கொண்டிருக்கும் இப்படிப்பட்டஒரு நிலையில் தான் இன்று இந்த நாடு இருக்கின்றது. இந்த நாட்டில் மதங்கள், இனங்கள் உண்டு. தனிமனிதர்கள் இருக்கின்றனர். உள்ளத்தின் நிறைவில் இருந்தே வாய்பேசும் என்பது வெளியில் இருந்து வருவதல்ல. அது உள்ளிருந்து வருவது. உள்ளத்தில் இருந்து வருவது. உள்ளத்தில் எது இருக்கின்றதோ அதுவே உதட்டிலும வெளிப்படும் அதுவே செயல்களிலும் எதிர் ஒலிக்கும்.

யுத்தம் முடிவடைந்து பன்னிறெண்டு வருடங்கள் ஆகியும் உண்மையான சமாதானமும், ஒப்புரவும் இன்னும் இந்த நாட்டில் ஏன் ஏறபடவில்லை? யுத்தம் முடிந்த கையோடு நாம் என்ன நினைத்தோம்? இனி எல்லாம் சரியாகிவிடும், சமாதானம் சாத்தியம் ஆகிவிடும் என்று குதூகலித்தோம். ஆனால் நமது கனவுகள இன்றுவரை நனவாகவில்லை இது கவலை அளிக்கின்ற ஒரு சூழ்நிலையாகும்.

இன்று எரியும் பிரச்சினைகள் பல நம் அனைவரின் கனவத்தை வெகுவாக ஈர்த்துகொண்டு இருக்கின்றன. யுத்தத்தால நேரடியாக பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு, நிவாரணம், மீள்கடியேற்றம் போன்றவை அவசியமாக, அவசரமாக தீர்க்கப்பட வேணடிய பிரச்சனைகளாகும். போருக்குப் பின்னர் ஏறப்ட்டுள்ள சமூகமான சூழ்நிலையில் இடமபெற்று வரும் கலசார சீரழிவு சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவை மிகவும் வேதனை அளிக்கும் விடயஙக்ளாக விளங்குகின்றன.

எலல்ாவற்றிற்கும் மேலாக தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எட்டாக்கனியாக இருப்பது ஏமாற்றம் அளிக்கும் நிலையில் உள்ளது.

இவ்விடயஙக்ள் இந்த நாட்டில் இருக்கக் கூடிய சமய, சமூகத்தலைவர்களின் கடமை பொறுப்பு என்ன என்ற கேள்வி எழுகின்றது. வெறுமனே கைகட்டி வாய் பொத்தி நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக் கொணடிருக்கப் போகின்றோமா? அல்லது நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு வலுவான சக்தியாக மாறி இந்நிலைமைகளை மாற்றி அமைக்க முயற்சி செயய்ப்போகின்றோமா? அல்லது நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு வலுவான சக்தியாக மாறி இந்நிலைமைகளை மாற்றி அமைக்க முயற்சி செய்யப் போகின்றோமா?

யுத்தம் முடிவடைந்தாலும் யுத்தத்தால் ஏறப்ட்ட மனக்காயங்கள் இன்று வரை எலல்ா சமூகங்களிலும் உள்ளன. உயிர் இழப்பு, உடமை இழப்பு, உடல் உறுபப்புக்களின் இழப்பு என இழப்பின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. இந்த இழப்புக்களால் ஏறப்ட்ட மனக்காயங்கள் இன்று வரை ஆற்றப்படவில்லை. அரசியல வாதிகளின் ஆவேசப் பேச்சுக்கள், சநத்ரப்பவாத பேச்சுக்கள் போன்றவற்றால் சிலவேளைகளில் இந்த மனக்காயங்கள் பெரிதாகிக் கொண்டு செல்கின்றன சூழ்நிலையே உள்ளது. இந்த நிலையில் மக்கள் மனஙக்ளில், சமூகங்களில் ஏறப்ட்டுள்ள இவ்வாறான மனக்காயங்களை யார் ஆற்றுவது? இம்மனகக்ாயங்களுக்கு யார் மருந்திடுவது? இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அனைத்து சமூகங்களையும் சார்ந்த மதத் தலைவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இந்தப் பணி காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

**சுயநலச்சுவர்களுக்குள்இருந்து வெளியே வரவேண்டும்**

நாம் நம்மைப்பற்றி மட்டுமே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. "தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்கும்" என்ற தமிழ் பழமொழி ஒன்று உணடு. மற்ற சமூகங்களின் பிரச்சினைகள். அபிலாசைகள், மன ஆதங்கஙக்ள என்பவற்றை உள்ளார்நத் அகக்றையோடு, கரிசனையோடு, நாம அனுக வேணடும். புரிந்துகொள்ள வேணடும். "எனது மதம், எனது இனம், எனது சமூகம்" என்று மட்டுமே சிந்திக்கின்ற சுயநல சுவரக்ளுக்குள் இருந்து நாம வெளியே வர வேணடும் இப்படிப்பட்ட ஒருமனநிலை மாற்றம் ஏறப்டும போதே இந்த நாட்டில் உணம்மயான அமைதி, ஒப்புரவு சாத்தியமாகும்.

**"நீதி இன்றி அமைதி இல்லை"**

உண்மையான சமாதானம் நீதியின் மேல் கட்டப்பட்டதாக இருக்க வேண்டும். நீதி இன்றி சமாதானம் இல்லை. "அமைதி என்றால் போர் நிகழாதிருக்கும் நிலமைமட்டுமலல் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் சக்திகளுக்கிடையே ஒரு சமநிலையைக் கொண்டுவர்வதிலும் அமைதியை அடக்கிவிட முடியாது. மாறாக அமைதி என்றால் "நீதியால் விளைவது" என்றுரைப்பது மிகப்பொருத்தமானது.

மனித சமுதாயத்திறக் அடித்தளம் அமைத்தவரான இரைவன் அச்சமுதாயத்தில் ஓர் ஒழுங்கு முறையையும் பொறித்து வைத்தான். இந்த ஒழுங்கு முறையின் முதிரந்த கனியாக பிறபப்து தான் அமைதி ஆகும். நீதியை என்றும் அதிக நிறைவாக நாடித்தேடுகின்ற மனிதர்களால் மேற்கூறிய ஒழுங்கு முறை செயறப்டுத்தப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. நாட்டில் உள்ள ஒவ்வொருவரக்கும் உரிய உரிமைகள் வழங்கப்பட வேணடும். அவர்கள் நீதியோடு நடத்தப்பட வேண்டும். அப்போது தான் அமைதி சாத்தியமாகும். நீதியை நிலைநாட்டாமல் அமைதியை ஏற்படுத்த முனைவது சாத்தியமாகாது.

நாம் ஒவ்வொருவரும் நம்மை எப்படி அன்பு செய்கிறோம். நம்மட்டில் எப்படியான அக்கறையைக் கொண்டிருக்கின்றோம் என்பது நமக்குத் தெரியும். என்னை மறற்வர் மதிகக் வேண்டும் என்று எதிர்பார்த்தால் நானும் அந்த மதிப்பை மற்றவர்களுக்கு வழங்க வேணடும். எனக்கு மற்றவர் ஊறுவிளைவிக்கக் கூடாது என நான் நினைத்தால் நானும் மற்றவர்களுக்கு ஊறுவிளைவிக்கக் கூடாது. என் மட்டில் மற்றவரக்ள் பெருந்தன்மைமையாக நடந்துகொள்ள வேணடும் என நான் எதிர்பாதால் நானும் மற்றவர்களிடத்திள் அவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்.

" நாம் குறிப்பிடுகின்ற அமைதி உலகில் நிலவ வேண்டும் என்றால் மனிதரின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். பிற மனிதர்களையும் மக்களினங்களையும் அவர்களுடைய மாண்பையும் உறுதிபடைத்த உள்ளத்தோடு மதித்தல் மற்றும் சகோதர உறவைப் பேரார்வதத்துடன் கடைப்பிடித்தல் ஆகியவை அமைதியைக் கட்டியெழுப்ப மிகமிக இன்றியமையாதவை."

மற்றவர்களுக்கு உரியவற்றைக் கொடுப்பது நீதி. ஆனால் மற்றவர்பால் நமக்கு உண்மையான அன்பு இருந்தால் மறற்வருக்கு உரியவற்றையும் விடமேலாக நாம் கொடுப்போம். எங்கு சுயநலம் அதியமாக இருக்கின்றதோ அங்கே அமைதி இருக்க முடியாது. பிறர் அன்பு இருக்கும் இடத்தில் தான் அமைதி இருக்க முடியும்.

"அமைதியியைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் அதற்கு முதல் நிபந்தனை மனிதரக்ளிடையே நிலவும் பிணக்குகளுக்கான காரணங்களை வேரறுத்தல் ஆகும். இவையெல்லாம் குறிப்பாக அநீதிகள், போரை உரமிட்டு வளரக்கினற் பொருளாதாரத்தில் நிலவுகினற் பெரும் ஏற்றத் தாழ்வுகளும், இவற்றை ஒழித்திடத் தேவையான வழிவகைகளை விரைவாக செயற்படுத்தாமையும் மேற்கூறிய பிணக்குகள் எழுவதற்குப் பலவேளைகளிலும் காரணமாகின்றன.

அமைதியை ஏற்படுத்தும் முயற்சி ஒரே இரவில் நடந்து முடியக்கூடிய ஒன்று அல்ல. மாறாக இது ஒரு தொடர் பயணம். ஏற்ற இறக்கங்களைக் கடந்தே இதை அடைய வேண்டும்.
"ஆகவே அமைதி என்பது உறுதியாக அடைந்துவிட்ட ஒன்றாக ஒரு போதும் இருபப்தில்லை. மாறாக இடையூறாக கட்டி எழுப்பப்பட்ட வேண்டிய ஒன்று. மேலும் மனித உள்ளம் வலுவற்றதாகவும் பாவத்தால் புண்பட்டதாகவும் உள்ளது. இவ்வாறிருப்பதனால் ஒவ்வொருவரும் தத்தம் உணரச்சிப்போக்குகளைக் கட்டுப்படுத்தினால் அன்றி, சட்ட முறையான ஆட்சியாளரக்ள் விழிப்பாய் இருந்தாலன்றி அமைதியை நிலை நாட்டுவது இயலாத காரியம்".

ஒன்றினைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்


# கொவிட் 19, டெல்ரா, ஒம்ரிகோன் போன்ற தொற்று நிலையை வெற்றிகொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

3ம். உலகமகா யுத்தம் என வர்ணிக்கப்படும் கொரோனா நெருக்கடி நிலை இன்னும் சில வருடங்களுக்கு தொடரப்போகிறது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இன்னும் பல பல அலைகள்: முடக்கல்கள் தளர்த்தல்கள், கட்டுப்பாடுகள், தட்டுப்பாடுகள், புதியவகை திரிபுகள், தடுப்பூசிகள், புதிய புதிய - திட்டங்கள் மாற்றங்கள் என இந்த சிக்கல் நிலை சில ஆண்டுகளுக்கு தொடரப் போகின்றது.

இந்த நிலையை மனதில் கொண்டே எமது சுகாரதார சமூக பொருளாதார நிலைகளை தக்கவைத்து வலுப்படுத்தும் திட்டங்கள் தீர்மானிக்கப்படவேண்டி இருக்கிறது.

இந்த திட்டங்கள் தனி மனிதன், குடும்பம், ஊர், பிரதேசம் நாடு என பல மட்டங்களிலும் நிகழவேண்டி இருக்கிறது. அவற்றில் சிலவற்றை இங்கு சுருக்கமாக கருத்திலெடுப்போம்.

1. சமூக இடைவெளி, முகக்கவசம், கைகழுவுதல் போன்ற சுகாதார நடவடிக்கைகளை கொரோனா அலை எழுந்தாலும் தாழ்ந்தாலும் தொடர்ச்சியாக கடைப்பிடிக்குமாறு அனைவரையும் ஊக்கப்படுத்துதல்.





2. தடுப்பூசிகளை தயங்காமல் போடுவதுடன் மற்றவர்களையும் போடுமாறு ஊக்கப்படுத்துதல்.




3. மிகப் பாரிய பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்நோக்கி இருப்பதால் அனாவசிய செலவுகள் அனைத்தையும் நாம் நிறுத்திக்கொள்ள வேண்டும். தனி “மனிதன், குடும்பம், "நிறுவனங்கள், ஆலயங்கள் என அனைத்து மட்டங்களிலும் இது கடைப்பிடிக்கப்படுவது வரவேற்கத்தக்கது.

4. உள்ளூர் விவசாய உற்பத்திகளை ஊக்கப் படுத்துதல், சந்தைப்படுத்துதல் போன்றவற்றிற்கு கிராம மட்டத்திலே புதிய - யுக்திகளை வகுக்கவேண்டிய நிலை இருக்கிறது.

5. வணக்கஸ்தளங்களினுடாக கொரோனா பரவும் நிலை அவதானிக்கப் படுகிறது. இதன் மூலம் பல குருமாரையும் இழந்திருக்கின்றோம். அதற்காக கோயில்களுக்குச் செல்ல வேண்டாம், கும்பிட வேண்டாம் என நீண்டகாலத்திற்குத் தடை விதிப்பது ஆரோக்கியமாக அமையாது. இது பலரின் உள ஆரோக்கியம் சம்மந்தப்பட்டது. எனவே தொற்று ஏற்படாதவகையிலே கோயில் நடவடிக்கைகள் பூசைகள் என்பன திட்டமிடப் படவேண்டி இருக்கிறது. இதற்காக புதிய முறைகளை அறிமுகம் செய்ய முடியும்.

6. கற்றல் செயற்பாடுகள் பாரிய தாக்கத்திற்கு உட்பட்டிருக்கிறது. பல மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை கைவிடும் நிலை எழுந்திருக்கிறது. இணையவழிக் கல்விமுறையும் பலரை "சென்றடைவதில்லை. அத்துடன் இதனால் ' மாணவர்களின். உடல் நிலையும் மன ஆரோக்கியமும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.

இந்த சிக்கல் நிலையை கையாள்வதற்கு பெற்றோர்களின் பெரும் பங்களிப்பு முக்கியமானதாகி நிற்கின்றது.

* மாணவர்களை கல்வியை தொடர ஊக்கவித்தல்



* இணையவழி கற்றலை கண்காணித்தல்.





* வீடுகளில் சிறுவர்களின் உடற்பயிற்சியை ஊக்குவித்தல்
* அவர்களின் மன ஆரோக்கியத்தைக் கருத்திலெடுத்தல்.
போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப் படவேண்டி இருக்கிறது.


1. நடமாட்டக் கட்டுப்பாடு காரணமாக மக்களின் உடற்பயிற்சி நிலை வெகுவாகக் குறைந்திருப்பது அவதானிக்கப்படுகிறது. இதனால் தொற்று நோய்களின் தாக்கவீதம் அதிகரித்து வருகிறது. எனவே

* வீட்டுத் தோட்டம் செய்வதை ஊக்குவித்தல்

* போக்குவரத்திற்கு துவிச்சக்கரவண்டி பாவனையை அல்லது நடத்தலை ஊக்குவித்தல்.







போன்ற செயற்பாடுகளும் திட்டமிடப் படவேண்டி இருக்கிறது.

1. உள்ளூரிலே உற்பத்தியாகும் ஆரோகீ கியமான உணவுகளின் பாவனையை ஊக்கப்படுத்தி இதன்மூலம் மக்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துதல். இது கொரோனாவின் தன்ன கனா குறைப்பதற்கு உறுதுணையாக அமையும்.

2. இதுபோன்ற பல திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தொடர் கலந்துரையாடல்களை கிராம மட்டத்தில் ஒழுங்கு செய்தல். -

எனவே கொரோனா பெரும் தொற்று நிலையை வெற்றிகொள்ள அனைவரினதும் ஒற்றுமையான பங்களிப்பு அவசியமாகி நிற்கின்றது.

**வைத்திய கலாநிதி.சி.சிவன்சுதன்**

ஒன்றினைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

# யாழ்ப்பாணம்: 30.10.1995

“ உடனடியாக குடாநாட்டைவிட்டு வெளியேறு” அந்தக் கட்டளை இரு தடவைகள் கண்டிப்பாக விடுக்கப்பட்டது

1.1990.10.30 முஸ்லிம்களுக்காக
2.1995.10.30 தமிழருக்காக

**இவ்விரு வெளியேற்றங்களும் சொல்லொணாத் துன்பங்களைச் சுமந்த பயணங்களாயின. முஸ்லிம்கள் எங்கு போவதென்று தெரியாமல் போனார்கள். தமிழர்கள் வன்னிக்குப் போவதென்று தெரிந்து போனார்கள். அந்த அவலங்களிள் கவிதை இது.**

அது ஒரு செவ்வாய்க்கிழமை மழை நாள் அட்டமித் திதி ஒளி குறைந்த, குளிரான பின்மாலை மழை பெய்து ஒய்ந்திருந்த சாலைகளின் வழியே சைக்கிளை மிதித்துச் சென்ற போது அந்த அறிவிப்புக் கேட்டது.

அன்பான ஜனங்களே...எதிரி நகரைப் பிடிக்க வருகிறான் நீங்கள் உங்கள் உடமைகளையும் எடுத்துக்கொண்டு உடனடியாக தற்காலிகமாக ஊர்களை விட்டோடுக”

அவகாசமில்லை ஒரு சிறிதும் அவகாசமில்லை நாடு திகிலடைந்து ஒரு நாயைப்போல தெருவிலோடியது சபிக்கப்பட்டோம்.

காதுள்ளவன் கேட்டிருக்கக் கூடாத வார்த்தைகள் அவை கண்ணுள்ளவன் பார்த்திருக்கக்கூடாத காட்சிகள் அவை

ஒரிரவுக்குள் முதுமை திடீரென எம்மைத் தாக்கியது

செம்மணி வெளியில் சோகமாய் நின்ற நகரின் வரவேற்பு வளைவைக் கடந்த அக்கணத்திலேயே எமது கனவுகள் நரைக்கத் தொடங்கின

இருண்ட கடலேரியில் இடையிடை எரிந்த பரா ஒளியில் தப்பியோட இருந்த ஒரே வழியூடாக

காயப்பட்ட ஒரு மலைப்பாம்பாக ஊர்ந்தூர்ந்து போனது நாடு ஒரு புண்ணியமும் செய்திராத நாடு வழிநெடுக்க குழந்தைகள் களைப்பாலிறந்தன

கால் நடைகள் வழி மாறித் தொலைந்தன

முதியோருக் கெலாம் இறுதி நாளது

ஊழிப் பெரு மழை பெய்தப்போது

உலகமே எங்களை மறந்து விட்டதா?

யாரும் யாருக்கும் ஆறுதலாயிராத ஒரு நாள் வருமென்று யாராவது நினைத்திருந்தோமா?

ஒரு இரவு முழுதும் ஒரு பகல் முழுதும் ஒரு சிறிய பாலங்களின் மீது பிசசைக்காரராய் காத்திருக்க ஒரு நாள் வந்ததே.

எமது குழந்தைகள் மழை நீரை ஏந்திக் குடிக்கவும்

எமது முதியோரைத் தெருவோரம் கைவிட்டுச செல்லவும் ஒரு நாள் வந்ததே

எல்லாக் கலையாடிகளும் எல்லாக் குறி சொல்வோரும் பொய்யராய்ப் போயினரன்று

எமது நகரின் கடைசி இரவது துயிலாதே தாகமாயிருந்த

இறுதியிரா வதிலே கண்டி வீதி நெடுக நாமிருந்து அழுதோம்

யாழ்ப்பாணமே ஓ- யாழ்ப்பாணமே பாலை நிலத்தின் புதிரே உன்னைப் பிரிந்தோம் அன்றுனைப் பிரிந்தோம்

இடிந்த கோட்டையே எறிந்த நூலகமே குருட்டு மணிக்கூட்டுக் கோபுரமே உமைப் பிரிந்தோம் அன்றுமைப் பிரிந்தோம்

பண்ணைத் துறையே பறங்கித் தெருவே பொம்மை வெளியே உமைப் பிரிந்தோம் அன்றுமைப் பரிந்தோம்




- நிலாந்தன




யாழில் மீள்குடியேரிய குடும்பங்களின் வறுமைக் கோட்டின்கிழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் 08.02.2022 அன்று மக்கள் பனிமனை இல் வைத்து வழங்கப்பட்டது




நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்கள் யாழ்ப்பாண முஸ்லிம்களை 29.01.2022 பஸார் ஜும்மா மஸ்ஜித்தில் சந்தித்து கலந்துரையாடினார். யாழ்ப்பாண முஸ்லிம்களது காணி, தொழில், மீள் குடியேற்றம் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார். புள்ளிவிபரத் துடன் மக்கள் பணிமனை தலைவர் அஷ்ஷெய்க் B.A.S. சுப்யான் தெளிவான முறையில் எடுத்து கூறுவதை படத்தில் காணலாம்.




மக்கள் பனிமனையின் கிழ் இயங்கும் இக்ர.ஃ. முன்பள்ளியின் மானவர்களின் சந்தை கண்காட்சி நிகழ்வு 26.01.2022





ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 7.30 மணிமுதல் 11.30 மணிவரை யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் இக்ர.ஃ. அஹதிய்யா சன்மார்க்க போதான பீடத்தின் வகுப்புக்கள் மக்கள் பனிமனையினால் நடைபெற்று வருகின்றது.

**ஒன்றினைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்**